www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16—30 செப் '88

3-21

விலை ரூ: 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



www.padippakam.com

## காவிரிநீர்:

# தமிழக உரிமைக்காக தொடரும் போராட்டம்



மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில் காவிரி நீரில் தமிழகத்தின் உரிமை கோரியும், ஓராண்டாய் ஈழத்தில் படுகொலை நடத்திவரும் இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தை எதிர்த்தும், பாசிச ராஜீவின் பெருகி வரும் ஊழல்களை அம்பலப்படுத்தியும் எழுச்சி மிகு சைக்கிள் பேரணியும் பொதுக்கூட்டமும் ஆகஸ்ட் 27ம் தேதி தஞ்சையில் நடத்தப்பட்டது.

முத்துப்பேட்டை, தம்பிக்கோட்டை, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, பாப்பாநாடு, ஒரத்தநாடு வழியாக அதிராம்பட்டினம் புதிய கலாச்சாரம் வாசகர் வட்டத் தோழர்கள் 22 சைக்கிள்களிலும்;

ஊரணிபுரம், திருவோணம், நாஞ்சிக்கோட்டை வழியாக 23 சைக்கிள்களில் திருவோணம் ஒன்றிய வி.வி.மு தோழர்களும்;

திருவெறும்பூர், கல்லணை திருக்காட்டுப் பள்ளி, பூதலூர், கள்ளப்பெரம்பூர் வழியாக 24 சைக்கிள்களில் ஓரணியும்;

திருவானைக்காவல், கல்லணை, திருக்காட்டுப்பள்ளி, கண்டியூர், அம்மம்பேட்டை, பள்ளியக்கிரகாரம் வழியாக 20 சைக்கிள்களில் ஓரணியுமாக இரண்டு அணிகளில் மகஇக திருச்சி தோழர்களும்;

புள்ளம்பாடி, டால்மியா, திருமழபாடி, திருமானூர், திருவையாறு, கண்டியூர் வழியாக 12 சைக்கிள்களில் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம், புள்ளம்பாடி தோழர்களும் — வழிநெடுக பலப்பல கிராமம், சிறு நகரங்களில் பல்லாயிரக்கணக்கானோரிடையே பிரச்சாரம் செய்துகொண்டு தஞ்சையில் திரண்டனர்.

தஞ்சை, தொம்பங் குடிசையிலிருந்து மாலை 6மணிக்கு எழுச்சி மிகு முழக்கங்களை எழுப்பிக்கொண்டு நகரின் பிரதான வீதிகளின் வழியாக நூற்றுக்கு மேற்பட்ட சைக்கிள்களில் பேரணி காவேரி சிறப்பங்காடி எதிரில் பொதுக் கூட்டமேடைக்கு வந்து சேர்ந்தது. தோழர் ஜெயசீலன விவிமு, திருவையாறு ஒன்றியம் தலைமை தாங்கினார். சமீபகாலமாக புரட்சிகர அமைப்புகள் மேலும், பொதுமக்கள் மேலும் தொடுக்கப்படும் போலீசு அடக்குமுறையைக் கண்டித்து தோழர் முத்து—மகஇக திருச்சிகிளை செயலர் எழுச்சிமிகு உரையாற்றினர். ஈழத்தில் இந்திய ஆக்கிரமிப்பு ராணுவம் நாளும் நடத்திவரும் ஈவிரக்கமற்ற படுகொலைகளையும் பாசிச ராஜீவ் கும்பலின் மிச்சைப் புளுகையும், ஆக்கிரமிப்பு வெறியையும் அம்பலப்படுத்தியும், துரோக ஒப்பந்தத்தை மீண்டும் நினைவுபடுத்தியும் தோழர் தமிழ்மணி, மகஇக திருச்சி, உறையாற்றினார்.

தாத்தா, மகள், பேரன் எனப் பரம்பரையாகத் தொடர்ந்துவரும் ஊழல் பரம்பரையான ராஜீவ் பரம்பரைப் பெருமையையும் பீரங்கி, கப்பல், எலிகாப்டர் எனத் தொடரும் ராஜீவின் ஊழல்களையும் விளக்கி அதற்கு முற்றுப் புள்ளி வைக்கப் புறப்பட்ட 'தேசிய மாற்று'களின் திரு உருவத்தை அம்பலப்படுத்தி, புரட்சிகரக் கட்சிகளால் தான் விடிவு வரும் என விரிவாய் எடுத்துரைத்தார் தோழர் காளியப்பன், மகஇக தஞ்சைப் பகுதி செயலர்.

அதனை அடுத்து விவிமு திருவோணம் ஒன்றியத் தோழர் ராம.துரைமாணிக்கம் காவிரிநீரில் தமிழகத்தின் உரிமையை வலியுறுத்தியும், அதுபற்றி மக்களிடமுள்ள தப்பெண்ணங்களைப் போக்கியும், ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகளின் அக்கறையற்ற போக்கை அம்பலப்படுத்தியும் சிறப்பானதொரு உரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மக்கள் கலை இலக்கியக் கழக மையக் கலைக்குழுவின் இசை நிகழ்ச்சி பல எளிய மக்கள் கலை வடிவங்களில் அருமையான பாடல்களையும் கலை நிகழ்ச்சியையும் நடத்தி அனைத்துப் பார்வையாளர்களின் பாராட்டுதலையும் பெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு ஏராளமான உழைக்கும் மக்கள் திரண்டனர். பல பெண் தோழர்கள் குழந்தைகளுடன் வந்திருந்தனர். சைக்கிள் பேரணியின் மூலமாகவும் பல்லாயிரக்கணக்கானோரிடம்நமதுமுழக்கங்கள்சென்றடைந்தன. பொதுக்கூட்டமும், பேரணியும் மக்களிடையே நல்லவரவேற்பைப் பெற்றது.

## பீரங்கித் திருடனின் வீதி உலா

போலிச் சுதந்திரத்தை திரைகிழித்து, மக்கள் கலை இலக்கியக் கழகம், கோவைகிளை புதிய வடிவ உத்தியைக் கையாண்டு மக்கள் மத்தியில் எடுப்பாக அம்பலப்படுத்தியது.

சைக்கிள் பிரச்சாரத்துடன் போபர்ஸ் பீரங்கி ஒன்று தயார் செய்யப்பட்டது. அதில் இரண்டு தோழர்கள்பீரங்கிதிருடன் ராஜீவ், இத்தாலி மருமகள்சோனியா வேடமணிந்து, சிம்மாசனத்தில் உட்கார்ந்து வர ஊர்வலம் தொடங்கியது. பீரங்கி திருடன் ராஜீவ் அமர்ந்திருந்த நாற்காலிகளின் இரண்டு கைப்பிடியில் இரண்டு மண்டை ஓடுகள் செருகப்பட்டு ஒன்றில் ஈழமக்கள், மற்றொன்றில் இந்திய மக்கள் என்றும் எழுதப்பட்டது. பீரங்கி வண்டி, பவனி வந்த தெருவெல்லாம் நாய்கள் பீரங்கித் திருடனைப் பார்த்து குரைக்க, ராஜீவ் வேடமணிந்ததோழர் நாலுகால் பிராணிகளுக்கெல்லாம் ஓட்டுப் பொறுக்கிகள் பாணியில் பவ்யமாக இருகரம் கூப்பி வணக்க செலுத்த சிறுவர், சிறுமியர்கள் ஆரவாரத்துடன் பகுதி மக்களும் சேர்ந்து கொள்ள, ஊர்வலம் முடிய மூன்றரை மணி நேரம் ஆனது.

நாற்பதாண்டுகால 'சுதந்திர' இந்தியாவின் சாதனைகளான, வேலையில்லா திண்டாட்டம், விலைவாசிஉயர்வு, ஆலைமூடல், ஆட்குறைப்பா, கறுப்பு சட்டங்களை அம்பலப்படுத்தும் வாசகங்கள் அடங்கிய தட்டிகள் ஊர்வலத்தில் ஏந்திச் செல்ல போலிச் சுதந்திரத்தின் துரோகத்தனம் பகுதி மக்களுக்கு எளிமையாக விளங்கியது.

—மக்கள் கலை இலக்கியக் கழகம்
கோவை.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

21

16—30 செப்டம்பர் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ 1-50
ஆண்டு சந்தா : ரூ 36

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
ஆண்டு சந்தா : ரூ 170

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015

## வன்னியர் பிரச்சினைக்குத் தீர்வு:
# இடஒதுக்கீடா? விவசாயப் புரட்சியா?

செப்டம்பர் 16, 17, 18 தேதிகளில் பெருமளவு வன்னியர்—திமுக மோத லுக்கும் சாவுக்கும் கொம்பு சீவிவிட்டு ரத்தம் குடிக்கக் காத்திருக்கிறது பாசிச ராஜீவின் தமிழகத்து எடுபிடி மூப்பனார்—சிதம்பரம்—பண்ருட்டி ராமச்சந்தி ரன் கும்பல். அந்த மோதல் மேலும் பல நாட்கள் நீடிப்பதற்கும் சாதிக்கலவர மாக வெடிப்பதற்கும்கூட வாய்ப்பிருக்கிறது. இப்போதைக்கு ஏதாவது ஒரு எதிர்பாராத காரணத்தால் தள்ளிப் போனாலும் எதிர்காலத்தில் நிச்சயம் வெடிக்கும் என்பதையும் அந்தக் கும்பல் உறுதிப்படுத்த வேலை செய்கிறது.

திமுக உள்ளிட்ட ஏழு எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள தேசிய முன்னணி யின் துவக்க விழாவைத் தமிழகத் தேர்தலைக் குறி வைத்து சென்னையில் செப்டம்பர் 17ந் தேதி ஏற்பாடு செய்துள்ளனர். அதே நாளைத் தியாகிகள் தினமாக வன்னியர் சங்கம் அறிவித்துள்ளது. துவக்க விழாவுக்கு சென்னை வரும் திமுகவினரை வன்னியர் சங்கத்தினர் மறிப்பதும் மோதல்கள் நடப்ப தும் யாவரும் எதிர்பார்க்கக் கூடியதே.

வன்னியருக்கு மாநிலத்தில் 20 சதவிகிதமும் மத்தியில் 2 சதவிகிதமும் இடஒதுக்கீடு கோரிய சிலரயில்—சாலை மறியல் போராட்டங்கள் நடத்தினர். இப்போது தேர்தலைப் புறக்கணிப்பதாகக் கூறி நிதிதிரட்டியும் பிரச்சாரம் செய்தும் வருகிறார்கள். வன்னியர்கள் பெரும்பான்மையாக வாழும்பகுதிகளில் ஓட்டுக் கட்சிகள் எதுவும் பிரச்சாரம் செய்வதையும், கொடி. ஏற்றுவதையும் கூட தடை செய்துள்ளார்கள்.

தமிழ்நாட்டிலேயே வன்னியர் சமூகம் மிகப் பெரியது. பல ஆண்டுகள் கடுமையாக உழைத்தும் பரம ஏழைகளாகவும், பாமரர்களாகவும்வாழும் இந்த மக்களை முன்னேற்றிவிடுவதாகக் கூறிக்கொண்டு அவ்வப்போது சில அமைப்புகளும் தலைவர்களும் தோன்றினர். குறிப்பாக மாணிக்கவேலு நாயக்கரும், ராமசாமிப்படையாச்சியும் தனித்தனிக் கட்சிகள் அமைத்து1952 தேர்தல்களில் போட்டியிட்டனர். கணிசமான வெற்றியும் பெற்றனர். ஆனால் தேர்தல் முடிந்ததும் வன்னியருக்குத் துரோகமிழைத்துவிட்டு, மந்திரி பதவிகளைப் பெற்றுக் கொண்டு ராஜாஜி தலைமையிலான காங்கிரசி டம் விலை போய்விட்டார்கள். பின்னர் வந்த வன்னியர் சாதிச் சங்கங்கள் சிதறிப் போய்விட்டன. இப்போது திண்டிவனம் டாக்டர் ராமதாஸ் தலைமை யில் மீண்டும் ஒன்று பட்டு பெரிய சங்கமாக வன்னியர் சங்கம் வளர்ந்துள் ளது.

தமக்குப் பதவி அல்லது தலைமை ஆசை கிடையாது. வன்னியர் சங்கம் தேர்தலுக்கு—அரசியலுக்கு வராது என்று கூறும் ராமதாஸ் அதே சமயம் தனிநபர் வழிபாடு ஆதிக்கம் வகிப்பதை அனுமதிக்கிறார். எதிர்காலத்தில் சாதி சங்கங்களின் கூட்டு ஆட்சியே நடக்கும் என்கிறார். தேர்தல் புறக் கணிப்பு, எந்த ஓட்டுக் கட்சிக்கும் அனுமதி கிடையாது என்கிற அதே சமயம் காங்கிரசு—மூப்பனார் பிரச்சாரத்தை மட்டும் அனுமதிக்கிறார். மூப்பனார்—சிதம்பரம்—பண்ருட்டி கும்பலுடன் ராமதாஸ் ஒரு இரகசிய பேரம் நடத்து வதாக வரும் செய்திகளை மறுப்பதில்லை. அவை வெறும் வதந்தி என்று ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் வன்னியர் சங்கம் வலுவாக உள்ள பகுதிகளில்தான் ராஜீவும், மூப்பனாரும் அடுத்தடுத்து பிரச்சாரம் செய்கின்ற னர்.

வேறும் விழுதும் இல்லாத இந்த நச்சு மரங்கள் அதாவது அணிகளோ மக்கள் ஆதரவோ இல்லாத பாசிச ராஜீவ் கும்பலின் எடுபிடிகள் நாட்டின் பல மாநிலங்களிலும் இதே தந்திரத்தைத்தான் மேற் கொண்டுள்ளனர். பஞ்சா பிலும், மேற்கு வங்கத்திலும், திரிபுராவிலும், குஜராத்திலும், கேரளாவிலும் சாதி, மத, வகுப்புவாத சக்திகளுடன் ஒரு இரகசிய பேரம் நடத்தி உடன்பாடு கண்டு எதிர்க்கட்சிகளுடன் மோதவிட்டு ஆதாயம் தேடும் தந்திரம். இதன் விளைவாக உயிர்பலியாவது உழைக்கும்மக்கள்தாம்.

இரண்டு உண்மைகளை வன்னிய மக்களுக்கு இந்தச் சமயத்தில் வலி யுறுத்துகிறோம் ● வன்னியர்களில் 60 சதவிகிதத்தினர் நிலமற்ற கூலி ஏழை விவசாயிகள்; 30 சதவிகிதத்தினர் நடுத்தர விவசாயிகள். இவர்களின் அடிப் படைப் பிரச்சினைகளான உழுபவனுக்கே நிலம்! குறைந்தபட்ச கூலி—வேலை உத்திரவாதம்! நியாய விலை! போன்ற விவசாயப் பிரச்சினைகளுக் கான தீர்வுதான் இன்றைய அவல வாழ்விலிருந்து விடுவிக்கும். இடஒதுக்கீடு வெறும் கண்துடைப்பாக, சலுகையாக, ஒரு சிறு பிரிவுக்கானதாகவே இருக் கும் ● அடிப்படை உழைக்கும் மக்களை சாதி, மத இன ரீதியில் பிளவு படுத்தி மோதவிட்டு ரத்தம் குடிக்கும் ஓட்டுப்பொறுக்கிகளின் குறி, பதவியைப் பிடிப்பதுதானே தவிர மக்கள் நலன் அல்ல. காங்கிரசும் சரி, பிற்போக்கு சாதியினரின் வகுப்புரிமை பேசி ஏய்க்கும் திராவிடக் கட்சிகளும் சரி ஓட்டுப் பொறுக்கவும் பதவியைப் பிடிப்பதற்கும் சாதாரண மக்களை பலியிடத் தயங்கமாட்டார்கள்.

எனவே வன்னிய உழைக்கும் மக்கள் சாதி வெறியர்கள் மற்றும் ஓட்டுப் பொறுக்கிகளின் சதிகளுக்குப் பலியாகாமல் அடிப்படையான விவசாயப் பிரச்சினைகளுக்காகப் மற்ற பிற பகுதி மக்களுடன் இணைந்து போராட வேண்டும்! ●

படிப்பகம்

www.padippakam.com

# அவதூறு தடைச் சட்ட மசோதா: கருத்து சுதந்திரத்துக்கு கல்லறை!

பாசிஸ்டுகள் உலகெங்கும் ஒரு அச்சில் வார்த்தெடுக்கப்படுகிறார்கள். பாசிச இட்லருக்கு கோயரிங் என்ற போலீஸ் மந்திரி இருந்தான். அடுத்தடுத்து கருப்புச் சட்டங்களை அறிமுகப்படுத்தி அரங்கேற்றுவது அவனது தொழில். அதே போல பாசிச ராஜீவுக்கு ஒரு சின்ன கோயரிங் சிதம்பரம் கிடைத்துள்ளார். கருப்புச் சட்டங்களைப் பரபரப்பாக அறிவித்து அரங்கேற்றுவதற்கென்றே அவதாரமெடுத்துள்ள வக்கீல் மந்திரி அவர்.

ஏற்கனவே பல கருப்புச் சட்டங்களைக் கொண்டு வந்து பாசிச ராஜீவின் வக்கீல் மந்திரியாகப் புகழ்பெற்ற சின்ன கோயரிங் சிதம்பரம், இன்னுமொரு கொடிய, உரிமை பறிக்கும் கருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். அவதூறு தடைச் சட்ட மசோதா 1988 என்று அதற்குப் பெயர். வழக்கம்போலவே இந்தக் கருப்புச் சட்ட மசோதாவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் படிக்கவோ விவாதிக்கவோ போதுமான அவகாசம் தரப்படாமல் அவசரம் அவசரமாக ஆகஸ்ட் 29 அன்று கொண்டு வரப்பட்டு அடுத்தநாளே நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் வெளிநடப்புக்குப் பிறகு நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தக் கொடிய கருப்புச் சட்டத்தின்படி—

● ஒரு பத்திரிக்கை மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டால் அது நேரடியாக செஷன்ஸ் கோர்ட்டில் நடத்தப்படும்.

● இந்த வழக்கு விசாரணை பகிரங்கமாக நடக்காது. அதாவது, வெளியாட்கள்—பார்வையாளர்கள் யாரையும் அனுமதிக்காமல் அறைக்குள்ளேயே ரகசியமாக விசாரணை நடத்தப்படும். இந்த வழக்கு கால இடைவெளியின்றி தொடர்ந்து நடத்தப்பட்டு மூன்று மாதங்களுக்குள் முடிவுற வேண்டும்.

● ஒருவரது ஊழலை—நடத்தையை விமர்சித்து ஒரு பத்திரிக்கை எழுதினால், அதற்கு சம்பந்தப்பட்டவர் என்ன பதில்—மறுப்பு கூறுகிறாரோ அதை ஒருவரி கூட குறைக்காமல் சிதைக்காமல் அப்படியே அப்பத்திரிக்கை வெளியிட வேண்டும்.

● அப்படி வெளியிடாத பத்திரிக்கை மீது குற்றம்சாட்டப்பட்டு, அதன் ஆசிரியர், வெளியிடுபவர், அச்சிடுபவர் மூவருமே ஒவ்வொரு நாளும் கோர்ட்டுக்கு வரவேண்டுமென நீதிபதி உத்திரவிட வேண்டும்.

● குற்றம்சாட்டப்பட்ட பத்திரிக்கை ஆசிரியரும்வெளியிடுபவரும், அச்சிடுபவரும் தங்கள் மீதுஎந்தக் குற்றமும் இல்லை என்பதைத்தாங்களாகவே நிரூபித்துக் கொள்ள வேண்டும். வழக்கை தாக்கல் செய்தவர் வழக்கு மன்றத்தில் எதையும் நிரூபிக்கத் தேவையில்லை. ஆனால் அவரைப் பற்றி எழுதிய பத்திரிக்கை தான் எழுதியது உண்மை என்பதை நிரூபிக்க வேண்டும்.

● அப்படி நிரூபிக்காவிட்டால் முதல் தடவை இக்குற்றத்திற்கு இரண்டாண்டு சிறைத் தண்டனையும், ஈராயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும். அதற்கடுத்த தடவையானால் ஐந்தாண்டு சிறைத் தண்டனையும் ஐயாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

—இக்கொடிய வாய்ப்பூட்டு சட்டம் நடைமுறைக்கு வந்தால் யாருமே பத்திரிக்கை நடத்த முடியாது. ஏனெனில் நாட்டின் எங்கோ ஒரு மூலையில் உள்ள ஒருவர், ஒரு பத்திரிக்கை மீது வழக்கு தொடர்ந்தால், உடனே வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்றத்துக்கு பத்திரிக்கையின் ஆசிரியர், வெளியிடுபவர், அச்சிடுபவர் மூவரும் அங்கே தினமும் வருகை தர வேண்டும். வழக்கு முடியும் வரை பத்திரிக்கை வேலையை மூட்டி கட்டி வைத்துவிட்டு அங்கேயே குடியேறுவதைத் தவிர வேறுவழியில்லை.

வழக்குதொடர்ந்தவர் மறுப்பு என்ற பெயரில் ஓராயிரம் பக்கங்களுக்கு எதையாவது எழுதிக் கொடுத்தால் அதை அப்படியே வெளியிடுவதைத் தவிர பத்திரிக்கையில் வேறு செய்தி எதையும் வெளியிட முடியாது.

மற்றபடி, இக்காட்டுமிராண்டி சட்டத்தால் பாதிக்காத வகையில் பத்திரிக்கை நடத்துவது என்றால் 'வத்தல்குழம்பு வைப்பது எப்படி?' என்று சிறப்புச் கட்டுரை எழுதலாம். 64 புள்ளிகளில் கோலம் போடும் அதிசயத்தை தலையங்கமாக எழுதலாம். இது தவிர அரசாங்க கெசட் அறிக்கைகளை அப்படியே மறுபதிப்பு செய்யலாம். வேறெதுவும் விமர்சன பூர்வமாக எழுத முடியாது.

இப்படிப்பட்டதொரு கொடிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கான காரணமாக, 42வது சட்டக் கமிஷன் அறிக்கையையும், பத்திரிக்கை கமிஷன் 1984ல் கொடுத்த அறிக்கையையும் வைத்து இப்புதிய சட்டத்தை உருவாக்கியுள்ளதாக பசப்புகிறது பாசிசகும்பல். ஆனால் உண்மையான காரணம் அதுவல்ல என்பது ஊரறிந்த உண்மை. கடந்த ஈராண்டுகளாகத் தொடர்ந்து ராஜீவ்கும்பலின் ஊழல்களையும் கொள்ளையையும் தோண்டித் துருவி நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்திக் காட்டியிருப்பது பத்திரிக்கைகள் தான்!

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் வெளியானதும், 'தேசத்துக்கு ஆபத்து' என்று கூச்சல் போட்டு திசை திருப்ப முயன்றது ராஜீவ் கும்பல். முடியாமற்போகவே பாராளுமன்ற கமிட்டியின் விசாரணை நாடகமாடியது. அதனால் மேலும் அம்பலப்பட்டு, கொள்ளைக்காரன் ராஜீவே என்று

பாசிச ராஜீவ் கும்பலின் அவதூறு தடைச்சட்ட மசோதாவுக்கு எதிராக பத்திரிக்கையாளர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.






படிப்பகம்

www.padippakam.com

# கருப்புச் சட்டம் வரும்பின்னே! குண்டர்படை பாயும் முன்னே!

போபர்ஸ் பீரங்கி ஊழலைத் தொடர்ந்து பாசிசப் பிரதமர் ராஜீவ் ஒரு கொள்ளைக்காரன் என்பது உறுதியாகி விட்டது. இளங்குழந்தைகள் கூட இரண்டுப் பாடலில் வேடிக்கையாக ராஜீவ் காந்தி கொள்ளைக்காரன் என்கின்றனர். குழந்தைகள் நிகழ்ச்சியொன்றில் இப்படியொரு சிறுமி குறிப்பிட்டதைபாட்னாவானொலி நிலையம் கடந்த மே 27 அன்று ஒலிபரப்பியது. இதைத் தொடர்ந்து வடநாட்டு பத்திரிக்கைகளில் காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. ஆனால் இளஞ்சிறுவர்களின் இது போன்ற இரண்டு வரிப் பாடல்கள் பிரபலமாகி பரவி வருவதைப் பாசிச கும்பலால் தடுக்க முடியவில்லை.

மத்தியப் பிரதேசம் சாகரிலுள்ள ஹரிசிங் கவுர் பல்கலைக் கழகத்தில் வெகுஜனத் தொடர்பு மற்றும் பத்திரிக்கை இயல்துறைத் தலைவராகவும் பயிற்சி ஆசிரியராகவும் உள்ள பிரதீப் கிருஷ்ணாத்ரே, இவ்வாண்டின் துவக்கத்தில் பத்திரிக்கை இயல்பட்டப் படிப்பு நுழைவுத் தேர்வுக்கான வினாத்தாளைத் தயாரித்தார். மாணவர்களின் பொது அறிவைச் சோதிக்கும் பல கேள்விகளோடு, எந்த வானொலி நிலையம் ராஜீவ் காந்தி ஒரு கொள்ளைக்காரன் என ஒலிபரப்பியது என்ற கேள்வியையும் வினாத்தாளில் சேர்த்திருந்தார்.

அவ்வளவுதான். வினாத்தாளில் ராஜீவை அவமானப்படுத்தும் வகையில் கேள்விகள் அமைந்ததாகக் கூறி பாசிச குண்டர் படையான இளைஞர் காங்கிரசு ரௌடிகள் பல்கலைக் கழகத்தில் அத்துமீறி நுழைந்து கிருஷ்ணாத்ரேயைத் தாக்கி முகத்தில் கரியைப் பூசி அவமானப்படுத்தினர். பல்கலைக்



கழக வளாகத்தினுள் ஏறத்தாழ ஒருமணி நேரத்திற்கு அவரை ஊர்வலமாக இழுத்துச் சென்று அவமானப்படுத்தினர். போலீசார் இந்த அயோக்கியத்தனத்துக்கு சாட்சியாக கைகட்டி வேடிக்கை பார்த்தனர். இளைஞர் காங்கிரசுத் தலைவனும், சாகர் வட்டார கிரிமினல் பேர்வழியுமான ராகேஷ் சர்மா இந்த வெறியாட்டத்தைத் தலைமையேற்று நடத்தினான்.

இதைத் தொடர்ந்து அப் பேராசிரியர் போலீசில் புகார் செய்தார். ஆனால் பாசிசகுண்டர்களின் விசுவாச போலீசு,ராகேஷ் சர்மாவைத் தவிர ஒப்புக்கு 10 காங்கிரசு ரௌடிகளைப் பிடித்து வைத்து 'பாவ்லா' காட்டியது. அதிர்ச்சியடைந்த கிருஷ்ணாத்ரே பல்கலைக்கழக துணைவேந்தரிடமும், கவர்னரிட்மும் சென்று முறையிட்டார். பின்னர் டெல்லிக்குச் சென்று முறையிட்டு விட்டுத் திரும்பும்போது போலீசாரால் கைது செய்யப்பட்டார். பொது இடத்தில் கீழ்த்தரமாக நடந்து கொண்டதாகவும், திட்டமிட்டே அமைதியை சீர்குலைத்ததாகவும் அவர்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதுதான் பாசிச ராஜீவ் கும்பல் ஆட்சியின் நீதி, நியாயம்! பல்கலைக் கழகப் பேராசிரியருக்கே இந்த கதி என்றால் பாமர மக்களுக்கு என்ன கதி?

மேலும் உறுதிப்படத் தொடங்கியதும், மேலும் தனிப்பட்டு கோழைத்தனமாக பத்திரிக்கைகளுக்கு வாய்ப்பூட்டு போட இக்கொடிய கருப்புச்சட்ட மசோதாவைக் கொண்டு வந்துள்ளது.

இதுவும் போதாது என்று, விசாரணைக் கமிஷன்களை விமர்சிப்பதும் அம்பலப்படுத்துவதும்கூட தண்டனைக்குரியகுற்றம் என்று 'விசாரணைக்கமிஷன் சட்டத் திருத்த மசோதா' என்ற இன்னுமொரு கருப்புச்சட்ட மசோதாவையும் கொண்டு வந்து, கருத்துரிமையின் குரல்வளையை நெறுக்கியுள்ளது பாசிச கும்பல்.

ஆனால் வழக்கத்துக்கு மாறாக இந்தியபத்திரிக்கையாளர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு இக்கருப்புச் சட்ட மசோதாவுக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து ஒருநாள் அடையாள வேலை நிறுத்தமும், கண்டன ஆர்ப்பாட்டங்களையும் நாடு தழுவிய அளவில் நடத்தினர்.

எதிர்பார்த்ததற்கு மேலாக கடுமையான எதிர்ப்பும், பத்திரிக்கையாளர்கள் ஐக்கியப்பட்டுஒரே குரலில் போராடுவதையும் கண்டஞ்சிய பாசிச கும்பல் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த வாய்ப்பூட்டு மசோதாவை ராஜ்ய சபையில் விவாதிப்பதை தற்காலிகமாக தள்ளி வைத்தது. மறுபுறம் தனதுகட்சிக்குள்ளேயே ஒரு கும்பலை எதிர்ப்புத் தெரிவிக்கத் தூண்டிவிட்டு, இப்போது நரித்தனமாக, இம்மசோதாவை வெளிப்படையாகவும், திறந்த மனதுடனும் விவாதிக்க விரும்புவதாகவும், யார் வேண்டுமானாலும் ஆலோசனையும் திருத்தமும் கூறலாம் என்றும் பசப்புகிறது. அதற்காக தனது காபினெட் மந்திரிகளைக் கொண்ட உயர் மட்ட குழுவை நியமித்து நியாயவானாக வேடம் போடுகிறது.

வழக்கமாக ஒவ்வொரு முறையும் ரயில்வே பட்ஜெட்டின் போது பயணிகள் கட்டணத்தைஅநியாயமாக உயர்த்திவிட்டு, பின்னர் பொது மக்களின் எதிர்ப்புக்கு மதிப்பளிப்பதாகக் கூறி, ஏற்றிய கட்டணத்தில் கடுகளவு குறைப்பதென்பது பாசிஸ்டுகள் கையாளும் பரம்பரை உத்தி. அதே வகையில் தான் இப்போது இக்கருப்புச் சட்ட மசோதாவை நீக்காமல், சில அம்சங்களை மட்டும் திருத்துவதாக நாடகமாடுகிறது பாசிச கும்பல். ஆனால் பத்திரிக்கையாளர்கள் இக்கருப்புச் சட்டத்தை நீக்காமல், பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்றுகூறி சபதமேற்று உறுதியாக நிற்கின்றனர்.

இது ஏதோ அரசுக்குப் பத்திரிக்கையாளர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல் மட்டுமல்ல. ஒவ்வொரு குடிமகனின் ஜனநாயக உரிமைக்கும், கருத்துசுதந்திரத்திற்குமான போராட்டம். பாசிச எத்தணிப்புகளுக்கு எதிரான போராட்டம். பாசிசம் அரங்கேறும் மேடையாகபாராளுமன்றம் மாறிவிட்டது. அறிவிக்கப்படாத 'அவசர நிலை' பாசிச ஆட்சி வேகமாகப் பற்றிப் படர்ந்து வருகிறது. இதை வெறுமனே பத்திரிக்கையாளர்கள் மட்டுமே ஒன்று கூடி எதிர்த்து முறியடித்து விட முடியாது. அண்டை நாடான பர்மா புகட்டும் அனுபவத்தைப் போல அனைத்து குடிமக்களும் அணிதிரண்டு போராடி இக்கருப்புச் சட்டத்தையும் அதன் எஜமானனான தேச விரோத—மக்கள் விரோத—பாசிச ராஜீவ் கும்பலையும் தூக்கியெறிய வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com

# மக்களின் 'காவலர்'களா? மனித மிருகங்கள்

கல்பனா சுமதி, வயது 25. தர்மபுரி— ஒசூரை அடுத்து இருக்கும் தளி கிராமத்தின் ஆசிரியை. நான்கு வயது மகளுக்குத்தாயான இவர் கடந்த ஜுலை 29ஆம்நாள் இரவு, உள்ளூர் போலீசு நிலையத்தில் வைத்து போலீசு மிருகங்களால் கற்பழிக்கப்பட்டார். போலீசு நிலைய இன்ஸ்பெக்டர், அவர் கீழ் பணிபுரியும் மூன்று போலீசுக்காரன்கள், போலீசுக்காரனின் மகன் என 5 பேர் கூட்டாகச் சேர்ந்து கற்பழித்தனர்.

தப்பிக்க போராடிய கல்பனா சுமதியை உயிரோடு கொன்றுவிட முடிவெடுத்து தலையையும் கையையும் நசுக்கி, இறந்து விட்டதாகக் கருதி உடலை அருகில் இருக்கும் ஓடையில் வீறியெறிந்திருக்கின்றனர். தற்செயலாக வந்த சிறு மழையும், குளிர்ந்த காற்றும் அருமருந்தாக அமைந்து கல்பனா சுமதியின் உயிரைக் காப்பாற்றியது.

போலீசு நிலையத்தில் எடுபிடி வேலை செய்யும் லட்சுமி என்பவள் இதற்கு உடந்தையாக இருந்திருக்கிறாள். போலீசுக்காரன்களின் இன்னொரு 'தொழில்' கூட்டாளியான ராஜம்மா என்பவளும் போலீசுக்கு உடந்தையாக இருந்திருக்கிறாள்.

இன்ஸ்பெக்டர் பாலசுப்பிரமணியத்திற்கும் ராஜம்மாவிற்கும் இருக்கும் கள்ளத் தொடர்பு ஏற்கனவே ஊர்மக்களுக்கு பிரபலமானது. ரகசியமாக, போலீசுக்காரன்களுக்கு சாராயம், பெண்கள், ஆபாசப்படங்களை நீண்ட நாட்களாக 'சப்ளை' செய்தவள்.

இக்கூட்டுக் கும்பலின் மிருகத்தனத்தைக் கண்டு கொதித்தெழுந்த ஊர்மக்கள் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டபோது தடியடி நடத்தி விரட்டியிருக்கிறான் கிரிமினல் குற்றவாளி இன்ஸ்பெக்டர் பாலசுப்பிரமணியம். முன்கை எடுத்து உண்மையைச் சேகரித்த உள்ளூர் இளைஞர்கள் போலீசு நிலையத்தில் பகிரங்கமாகத் தாக்கப்பட்டு'லாக் அப்'பில் அடைக்கப்பட்டனர்.

உள்ளூர் மக்களும், பகுதி வியாபாரிகளும் போலீசின் மிரட்டலுக்கு பணியாமல் தொடர்ந்து போராட்டங்கயையும் வேலை நிறுத்தங்களையும் நடத்தி விபரங்களை வெளியுலகுக்கு கொண்டு வந்தனர்.

போலீசு, வழக்கமான முறையில் செயல்பட்டு தடயங்களையும், உண்மை விபரங்களையும் அழிக்க கிளம்பியது.

● மிருகத்தனமான முறையில் கற்பழிக்கப்பட்டு குற்றுயிராக ஓடையில் வீசப்பட்ட கல்பனா சுமதி கற்பழிக்கப்படவில்லையென்றும் வெளிக்காயங்கள் மட்டுமே சில இருந்ததாகவும் ஒசூர் பொது மருத்துவமனையிலிருந்து சான்றிதழ் பெற்றது, போலீசு.

● உள்ளூர் மக்களால் முதலில் கொடுக்கப்பட்ட உண்மை விபரங்கள், அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை, பின்னர் கிழித்தெறியப்பட்டு 8நாட்களுக்கு பிறகு பொய்யாக ஒரு முதல் தகவல் அறிக்கையை தயாரித்தது போலீசு.

✱ கல்பனா சுமதி கற்பழிப்பு விவகாரம் வெளியில் வந்தவுடன் அதற்கு மூளையாக இருந்து செயல்பட்ட ராஜாம்மாளையும் மர்மமான முறையில் கொன்று ஏரியில் வீசிவிட்டது போலீசுக் கும்பல்.

● மாநில சட்டம்— ஒழுங்கு ஐ.ஜி ராஜசேகரன் நாயர், வேலூர் சரக டி.ஐ.ஜி,எ.எக்ஸ் அலெக்சாண்டர் கும்பல் இதில் நேரிடையாக தலையிட்டுபோலீசு துறையின் மானத்தைக் காப்பாற்ற பகீரதபிரயத்தனம் செய்கிறது.

ஒன்றரை மாதம்ஆகியும் இன்னும் உடல் நிலை தேறாமல் பெங்களூர் செயின்ட் ஜான் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவரும் கல்பனா சுமதி, ''குற்றவாளிகளை விசாரித்து தூக்கில் போடவேண்டும். இல்லையானால் நாங்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்வோம். அவர்கள் உயிரோடு இருக்கும்வரை எங்களுக்கு பாதுகாப்பில்லை'' என்று வேதனையோடு கூறுகிறார்.

⁂

கட்டக்கடா, கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டத்தில் இருக்கும் குக்கிராமம். இக்கிராமத்தில்வசிக்கும் 19வயதுரமணி என்ற சகோதரி பள்ளி இறுதி நிலை வகுப்புவரைப் படித்தவர். வேலை விசயமாக இவர் கடந்த ஏப்ரல் மாதம் 30ந்தேதி தன் உறவினர் ஒருவருடன் அண்டை நகரத்துக்கு சென்றுவிட்டு இரவு கடைசி பேருந்தில் ஊருக்கு திரும்பினார்.

பயண வழியில் இவர்களை கிண்டல் செய்து பொறுக்கித்தனம் செய்த நடுத்தர வயதுடைய நான்கு குண்டர்கள் அதே பேருந்தில் வந்து கொண்டிருந்தனர். பேருந்து நிறுத்தத்தின் அருகிலேயே தங்கள் வீடு இருப்பதால், அதைப் பற்றி ரமணியும் அவரது உறவினரும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

பேருந்து நிறுத்தத்தில் இறங்கியபோது, ஊரே ஒரே கும்மிருட்டாக இருந்தது. மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இருட்டில் இறங்கி சில அடிகள் தூரம் நடந்தவுடன், இவர்களுடன் இறங்கிய குண்டர்கள், ரமணி உறவினரை கத்திமுனையில் சத்தம் செய்யாமல் அடித்து கிடத்திவிட்டு, ரமணியை அருகில் இருக்கும் வாழைத்தோட்டத்தில் இழுத்துச் சென்றுகூட்டாக கற்பழித்துவிட்டு அவரை நிர்வாணமாகப் போட்டுவிட்டு சென்றனர்.

நள்ளிரவில், தங்கள் குடிசையின் முன்பு சுயநினைவற்று, முனகிக் கொண்டிருந்த ரமணியை தூக்கி வந்து உதவி அளித்தனர், கூலி ஏழைகளான சாந்தா, சசி தம்பதியினர். அதன் பிறகு, அருகில் இருக்கும் நெய்யாறு போலீசு நிலையத்தில் தொடர்ச்சியாக புகார் மனுக்கொடுத்து நீதி கேட்டனர், ரமணி குடும்பத்தினர். புகார் மனுவின் மீது பெயரளவுக்கூட எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை, போலீசு கும்பல்.

இக்கொடுமையை வெளி உலகுக்கு தெரிவித்த 'வீக்லி' பத்திரிக்கையாளர், ஆதாரங்களைச் சேகரித்து, கேரள மாநிலத்தின் உயர் போலீசு அதிகாரியான டி.ஜி.பி ராஜகோபால் நாராயணனிடமும் மற்றும் பல உயர்மட்ட அதிகாரிகளிடமும்

குண்டர்களால் கூட்டாக கற்பழிக்கப்பட்ட சகோதரி ரமணி.





படிப்பகம்

www.padippakam.com



பெங்களூர் செயிண்ட் ஜான் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் கல்பனா சுமதி; அருகில் கணவர் வெங்கடேச மூர்த்தி.

நேரடியாக புகார் செய்தார். உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியது போலீசு கும்பல். ஒன்றரை மாதம் கழித்து உண்மை நிலவரம் அறிய சென்ற பத்திரிக்கையாளருக்கு அதிர்ச்சி! ரமணி வழக்கை போலீசுக்கும்பல் தலைகீழாக மாற்றியிருந்தது.

ரமணி ஒரு விபச்சாரி என்றும், அதற்கு ஆதாரமாக ஆட்டோ ரிக்ஷா தொழிலாளி ஒருவர் அவரது நிரந்தர வாடிக்கையாளர் என்றும் பொய்சாட்சியங்களை தயாரித்து, ரமணியை அவமானப்படுத்தி விரட்டியடித்திருக்கிறது. கற்பழித்தற்கான மருத்துவ சான்றிதழை வைத்துக் கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனைக் கொடுக்க முடியாது. நேரடியான சாட்சியங்கள் வேண்டும் என சட்டம் பேசுகிறது போலீசு. ஆனால் ரமணிக்கு முதலுதவி அளித்த சாந்தா-சுசி தம்பதியினரை சாட்சியங்களாக கொடுத்தும் இதுவரை அவர்களை விசாரிக்கவில்லை போலீசு.

இவ்வளவுக்கும் காரணம், கற்பழித்த நால்வரில் ஒருவன் காங்கிரசுக் கட்சியின் பஞ்சாயத்து உறுப்பினன்.

**கோ**ட்டூர், கட்டக்கடா அருகில் இருக்கும் அடர்ந்தக்காட்டை ஒட்டிய, பழங்குடிகள் வாழும் கிராமம். கடந்த மே மாதம் 29ந் தேதி, இரண்டு பழங்குடிப் பெண்கள் அருகில் இருக்கும் சந்தைக்கு சென்று ஒரு சிறுமியுடன் வீடு திரும்பியிருக்கின்றனர்.

காட்டுப்பாதையில், அடையாளம் தெரியாத இரண்டு குண்டர்களால் கத்திமுனையில் வழிமறிக்கப்பட்டு கூட்டாக கற்பழிக்கப்பட்டு குட்டையில் வீசப்பட்டனர். உடன் சென்ற சிறுமி செய்வதறியாது அரைமணி நேரத்திற்கும் மேலாக அவர்கள் பக்கத்திலேயே இருட்டில் இருந்திருக்கிறாள். ரோந்துவந்தகாட்டிலாகா ஊழியர்கள், நினைவிழந்து சேற்றில் கிடக்கும் இரண்டு சகோதரிகளையும் சிறுமியையும் நெய்யாறு போலீசு நிலையத்தில் ஒப்படைத்து நடந்த சம்பவத்தை கூறியிருக்கின்றனர்.

பல மாதங்கள் கடந்தும் பழங்குடி சகோதரிகளுக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. விவகாரம் கேரள சட்டசபையில் கிளப்பப்பட்டது. நெய்யாறு போலீசு நிலையத்தின் இரண்டு போலீசுக்காரர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். ஜூன் மாத இறுதியில் வழக்கு முடிந்து விட்டதாக இரண்டு போலீசுக்காரர்களும் 'பணிக்கு' அமர்த்தப்பட்டனர். ஆனால், இதுவரை குற்றவாளிகள் யார் என்பதுகூட கண்டுபிடிக்கப்படவில்லை.

அதே போலீசு நிலையத்தில் 6 வயது சிறுமி கற்ப்ழிக்கப்பட்ட புகார் மனு இன்னும் கேட்பாரற்று கிடக்கிறது. ஆனால் போலீசின் சமூக விரோத செயலுக்கும் பொய் வழக்குகளுக்கும் துணை போக மறுக்கும் கூலி ஏழைகளும் மனித தன்மையற்ற முறையில் சித்திரவதை செய்யப்படுவது மட்டும் நாள்தோறும் தொடர்கிறது.

கிருஷ்ணன் குட்டி நெய்யாறு போலீசு நிலையத்தின் அருகில் இருக்கும் கொத்தமங்கலம் கிராமத்து இளைஞர். பொய்வழக்கின் கீழ் கைது செய்யப்பட்ட இவர் 15 நாட்கள் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டார். அவர் வாயில் மூத்திரத்தை ஊற்றியும் மலத்தை திணித்தும் அக்கிரமம் புரிந்திருக்கின்றன போலீசு மிருகங்கள்.

இவ்வாறு ஒன்று இரண்டல்ல, போலிக் கம்யூனிஸ்டுகள் பொறுப்பேற்ற நாளிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள், மிருகத்தனமாக தாக்கப்பட்டதாக 846 வழக்குகள் பதிவாகியிருக்கின்றன. இதில் 46 வழக்குகள் தாழ்த்தப்பட்ட பெண்கள் கற்பழிக்கப்பட்டதற்காக பதிவாகிஇருக்கின்றன. குற்றங்களுக்கான தண்டனை மட்டும் இன்னும் குற்றவாளிகளை தீண்டவில்லை.

சம்பல் கொள்ளைக்காரன்கள் முதல் சாதாரண பிக்பாக்கெட் கேடி வரை உள்ள தொழில்முறை கிரிமினல் குற்றவாளிகள் கூட, மருந்துக்காவது மனித நேயத்துடன் செயல்பட்டதற்கான சம்பவங்கள் உண்டு. பொது மக்களின் சேவகர்களாக, சட்டம்—ஒழுங்கு காவலர்களாக சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள போலீசு கும்பலின் அக்கிரமங்கள் வெறிநாய்களே மேல் என்ற நிலைக்கு மக்களை குதறி பிடுங்குகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள, போலீசின் அட்டூழியங்கள் நாளும் நடக்கும் பல நூறு போலீசு கொடுரங்களில் ஒரு சிலதான். நாட்டில் நடக்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வழிப்பறி, திருட்டு, போதை பொருட்கள் சூதாட்டம், இன்னபிற அனைத்து சமூக விரோத கிரிமினல்களை ஊக்குவிப்பது, பங்கு கேட்பது மட்டுமல்ல நேரிடையாகவும், பகிரங்கமாகவும் இக்கிரிமினல் குற்றங்களில் போலீசு கும்பல் ஈடுபடுவது எண்ணற்ற குற்றங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் மிகப்பெரும் சமூக விரோத கும்பலும் நிறுவன ரீதியில் ஒழுங்கமைப்பட்டதுமான போலீசு கும்பல், நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் என்ற பிரமையை உதறியெறிந்து அதனிடமிருந்து தங்களையும், நாட்டையும் பாதுகாத்து கொள்வதே இன்று மக்களின் முன்னுள்ள முக்கிய கடமை.

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# உரிமை கேட்டால் உதை



போராடும் மக்களை மட்டுமல்ல, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க்கட்சி எம்எல்ஏ எம்பிக்களைக்கூட மிருகத் தனமாகத் தாக்கத் துணிந்துவிட்ட காட்டுமிராண்டி என்பதை பாசிசப் பிரதமர் ராஜீவ் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளார். தொடர்ச்சியாக, வளர்ச்சித்திட்டங்களில் ஆந்திர மாநிலம் புறக்கணிக்கப்பட்டு வருவதைக் கண்டித்து பிரதமரின் விடு நோக்கி ஊர்வலமாகச் சென்ற ஆந்திர எம்எல்ஏக்கள் எம்பிக்களை பாசிச ராஜீவ் கும்பல் தனக்கே உரித்தான வக்கிரத்துடன் தாக்கியுள்ளது.

ஆந்திராவின் ராயலசீமா பகுதியில் நீர்ப் பாசன திட்டங்கள் நீண்டகாலமாக மேற்கொள்ளப் படாமல் புறக்கணிக்கப்படுவதாக குறைகூறி அப்பகுதியின் காங்கிரசு எம்எல்ஏக்கள் என்டி ஆர் அரசுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தைத் துவக்கினர். 'இது மாநில அரசின் தவறல்ல. மத்திய அரசு உரிய நிதி ஒதுக்காததாலேயே இத்திட்டங்கள்முடங்கிக் கிடக்கின்றன' என்று வாதாடியது என்டிஆர் அரசு. ஆனாலும் காங்கிரசின் திடீர் கரிசனத்தைத் தோலுரித்துக் காட்டவும், எதிர்க்கட்சி அரசாளும் மாநிலங்களுக்கு வளர்ச்சிப் பணிகளை மத்திய அரசு திட்டமிட்டே புறக்கணித்து வருவதை எதிர்த்தும் பிரதமர் ராஜீவிடம் முறையிட எம்எல்ஏக்கள், எம்பிக்கள், மாவட்ட பரிஷத் உறுப்பினர்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தமது கட்சிப் பிரதிநிதிகளை திரட்டிக் கொண்டு டெல்லிக்குப் போனார் என்டி ஆர்.

'ஆந்திராவின்இரட்டைநகரங்களானஹைதராபாத்—செகந்திராபாத் உள்வட்ட இருப்புப் பாதை திட்டம், 22க்கும் மேற்பட்ட நீர் பாசன திட்டங்கள், தெலுங்கு கங்கை திட்டம், தொலைக்காட்சியில் இரண்டாவது அலைவரிசைக்கான திட்டம், ஹைதராபாத் விமான நிலையத்தை சர்வதேச விமானத்தளமாகமாற்றும்திட்டம், இது தவிர ஏராளமான அரசுத் துறை நிறுவனங்களை துவங்கும் திட்டங்கள் முதலான அனைத்துமே காகிதத் திட்டங்களாக உள்ளன. கடந்த ஐந்தாண்டுகளாக ஆந்திராவுக்கான எந்த வளர்ச்சித் திட்டத்திற்கும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடக்கிறது' என்று கூறி தெலுங்கு தேசக் கட்சியினரும் ஆந்திராவின் அதன் கூட்டணி கட்சிகளும் டெல்லியிலே தர்ணா போராட்டத்தைத் துவங்கின. தெலுங்கு தேசக் கட்சியின் 47 எம்பிக்கள் பிரதமரை சந்தித்து இது குறித்துப் பேச நேரம் ஒதுக்கக் கோரியும் பாசிச ராஜீவ் திமிர்த்தனமாக மறுத்து விட்டார்.

அடுத்த நாளான, செப்டம்பர் முதல் நாளன்று பிரதமரின் வீடு நோக்கி ஊர்வலமாகச் சென்ற தெலுங்கு தேசக் கட்சியினரை தடையுத்திரவைக் காட்டி போலீசார் மறித்தனர். பின்னர், தெலுங்கு தேசக் கட்சியினர்வேறு பாதை வழியே சென்று பிரதமர் வீட்டை நெருங்கியபோது போலீசார் தடியடியில் இறங்கினர். கண்ணீர் புகை குண்டுகளை வீசி கூட்டத்தைக் கலைத்தனர். அடிபட்டுவிழுந்த 'மாண்புமிகு'மக்கள் பிரதிநிதிகளை நாயைப் போல இழுத்துச் சென்று போலீஸ் வேனில் ஏற்றி போலீசு நிலையத்தில் ஆறு மணி நேரத்திற்கும் மேல் அடைத்து வைத்தனர்.

பாசிச ராஜீவ் அரசின் இந்தக் காட்டுமிராண்டித் தனத்தைக் கண்டித்து எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் வெளிநடப்பு செய்த போதிலும்கூட பாசிச ராஜீவ் வருத்தமோ மன்னிப்போ கேட்கவில்லை. ஆனால் அடுத்த இரு நாட்களில், "இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயகம் சில சட்டமன்ற பிரதிநிதிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் ஜனநாயக மரபுகள் மூலம் சாதிக்க முடியாமல், தெருவில் நின்று வித்தை காட்டுகின்றனர்" என்று வாய்க் கொழுப்பேறி பிதற்றினார்.



மனு கொடுக்கவும் உரிமையில்லை. 'மக்கள்பிரதிநிதி'களின் மண்டையைப் பிளக்கும் ராஜீவின் போலீசு; நாயைப் போல இழுத்துச் செல்லப்படும் ஆந்திராவின் 'மாண்புமிகு'மந்திரிகள்.

அதையே ஆயுதமாக்கிக் கொண்டு எதிர்க் கட்சியினர் ராஜீவைத் திருப்பித் தாக்கினர். நாடாளுமன்றக் கூட்டங்களுக்கு வராமலும், வந்தாலும் அப்பட்டமாகப் புளுகிக் கொண்டும், தன் கட்சியினரைத் தூண்டிவிட்டு எதிர்கட்சிகளுக்கு எதிராககூச்சல் போட்டும் வருகிற பிரதமர் ராஜீவினால் தான் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குப் பெருந்திங்கு ஏற்பட்டுள்ளது என்று வாயடைத்தனர்.

வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்காமலிருப்பது ஆந்திராவுக்கு மட்டுமேயான



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினை அல்ல. எல்லா எதிர்க்கட்சி அரசுகளும் எதிர்கொள்ளும் பிரச்சினைதான்.

சமீபத்தில் கடுமையான வெள்ளத் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள அஸ்ஸாமில் உடனடி நிவாரண ஏற்பாடுகளைக்கோரி ஆளும் மகந்தா அரசு பலமுறை கெஞ்சியும்கூட பாசிச ராஜீவ் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தவிர, வெள்ளக் கட்டுப்பாட்டிற்கான தொலைநோக்குத் திட்டம் குறித்து பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்த அசாம் எம்பிக்களும் மந்திரிகளும் பல முறை முயன்றும் பாசிச ராஜீவ் நேரமில்லை என்று தட்டிக் கழித்து விட்டார். பாராளுமன்றத்தில் இதுபற்றி விவாதிக்க அசாம் எம்பிக்கள் பத்து நாட்களாக முயன்றும்கூட அனுமதியளிக்கப்படவில்லை. ஆனால் எதிர்கட்சிகள், ஆந்திர எம்எல்ஏக்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து வெளிநடப்பு செய்த அதே நாளில் அனுமதியளித்தனர். பாசிச கும்பலின் இக்கேவலமான நடைமுறையை ஏற்காமல் அசாம் எம்பிக்கள் எதிர்கட்சியினரோடு சேர்ந்து வெளி நடப்பு செய்தனர்.

ஏற்கெனவே கடந்த மாதத்தில் மேற்கு வங்கம் திட்டமிட்டே புறக்கணிக்கப்படுவதாகக் கூறி போலிக் கம்யூனிஸ்டுகள் டெல்லியில் தர்ணா போராட்டம் நடத்தினர்.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் திட்டமிட்டே புறக்கணிக்கப்படும். அதே சமயம் தரகு முதலாளிகளின் சுய நலன்களுக்காகவும் அவர்களின் ஆளும் கட்சியான காங்கிரசு தலைவர்களின் நலன்களுக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்கள் முடுக்கிவிடப்படுகின்றன. முன்பு இந்திரா போட்டியிட்ட சிக்மகளூர், மேடக் தொகுதிகளுக்கும் இப்போது ராஜீவின் அமேதி தொகுதிக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. பெரும்பாலான வளர்ச்சித் திட்டங்கள் இந்தி பேசும் வட மாநிலங்களுக்குள்ளேயே முடக்கப்படுகிறது பாசிச கும்பலின் குறுகிய பிராந்திய, இன, சாதி மதவெறி அடிப்படையிலான சுய நலன்களே இதற்குக் காரணம். இந்த லட்சணத்தில் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பதாக மார்தட்டிக் கொள்வது நல்ல வேடிக்கை. பாசிச கும்பலை வீழ்த்தாமல், இத்தகைய ஏற்றத்தாழ்வுகளையும், ஓரவஞ்சனைகளையும் ஒருபோதும் நீக்கிவிட முடியாது.

● மனோகரன்

### நாகாலாந்து-மிஜோரம் ஜனாதிபதி ஆட்சி

# காங்கிரசு கவர்னர்களின் கயவாளித்தனம்

கவர்னர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வேலையே எதிர்க்கட்சி அரசுகளைக் கவிழ்ப்பது, காங்கிரசின் ஏஜெண்டாக வேலை செய்வது என்பதுதான். இதை தெற்கே தமிழக கவர்னர் அலெக்சாண்டரின் ஆட்சி மட்டுமல்ல; வடகிழக்கே நாகலாந்து, மிஜோரம் ஆகிய மாநிலங்களில் சமீபத்தில் நடந்தேறிய நிகழ்ச்சிகளும் தெளிவாக நிரூபித்துக் காட்டுகின்றன.

ஃ ஃ

நிலையற்ற ஆட்சிக்கும் கட்சி மாறிகளுக்கும் பேர் போன நாகாலாந்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. மொத்தமுள்ள 60 தொகுதிகளில் காங்கிரசுக் கட்சி 34 இடங்களில் வென்று பெரும்பான்மை பெற்று ஆட்சியை அமைத்தது. ஆனால் கடந்த ஆகஸ்ட் துவக்கத்தில், முதன் மந்திரி சீமா, ஜப்பானுக்குப் பயணம் போன நேரத்தில் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த 4 மந்திரிகள் உள்ளிட்ட 18 சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேறி, நாகா காங்கிரஸ் என்ற கட்சியைத் துவக்கினர். எதிர்க்கட்சி கூட்டணியான நாகா பிராந்திய கூட்டணிக்கு (JRL) தமது ஆதரவை வழங்கினர். இதனால் காங்கிரசுக் கட்சி சட்டமன்றத்தில் சிறுபான்மையானது. காங்கிரசிலிருந்து மூன்றிலொரு பங்குக்கும் மேலாக வெளியேறி தனிக்கட்சி அமைத்தவர்களும் எதிர்கட்சி கூட்டணியினரும் சேர்ந்து சட்டமன்றத்தில் பெரும்பான்மையாகினர்.

காங்கிரசு விசுவாசியும் கவர்னருமான கிருஷ்ணாராவ்



மீற்றிக் கொள்ளப்படும் இந்திய நாடாளுமன்ற ஜனநாயக சட்ட விதிகளின்படி, எதிர்க்கட்சி கூட்டணியினரை புதிய அரசமைக்க கவர்னர் அழைக்க வேண்டும். ஆனால் காங்கிரசு விசுவாசியும், ஓய்வு பெற்ற முன்னாள் ராணுவத்தளபதியும், நாகாலாந்து மற்றும் திரிபுரா மாநிலங்களின் கவர்னருமான கிருஷ்ணாராவ், தலைநகர் கொஹிமா பக்கமே தலைவைத்துப் படுக்காமல் தலைமறைவாகி விட்டார். அவர் எங்கிருக்கிறார் என்ற விபரம் யாருக்குமே தெரிவிக்கப்படவில்லை. டெல்லியிலிருந்து காங்கிரசு பெருச்சாளிகள் ஓடோடி வந்து கட்சி மாறிகளை சமரசப்படுத்த முயன்றும் முடியவில்லை. அதைத் தொடர்ந்து காங்கிரசு கவர்னர் கிருஷ்ணாராவ், மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு கெட்டு விட்டதாகவும், சட்ட விதிகளின்படி புதிய அரசமைக்க வாய்ப்பில்லாத நிலையிலும் ஜனாதிபதி ஆட்சிக்கு சிபாரிசு செய்வதாக டெல்லிக்கு அறிக்கை அனுப்பிவிட்டு வெளியே தலைகாட்டினார்.

எதிர்கட்சியினரும் சட்ட வல்லுனர்களும் இது ஜனநாயக விரோதமானது என்று கூப்பாடு போட்டாலும் அது பற்றி கவலைப்படாமல், எதிர்க்கட்சி அரசமைப்பதைத் தடுக்கும் வெறியுடன் பாசிச ராஜீவ்கும்பல் சர்வாதிகாரமாக நாகாலாந்தில் ஜனாதிபதி ஆட்சியைத் திணித்தது. காங்கிரசு கழிசடைகள் அடுத்த தேர்தலுக்கான பேரங்களில் இறங்கி ஆள்பிடிக்க அவகாசத்தையும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

பத்தாண்டுகால கொரில்லா யுத்தத்தைக் கைவிட்டு சரணாகதி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தேர்தல் பாதைக்குத் திரும்பிய மிஜோ தேசிய முன்னணியினர் ஆளும் மாநிலம்தான் மிஜோரம். செப்டம்பர் முதல் நாளன்று ஆளும்



படிப்பகம்

www.padippakam.com



காங்கிரசை நம்பிய மிஜோ தேசிய முன்னணியின் ஆட்சியைக் கவிழ்த்து நட்டாற்றில் விட்டது பாசிச ராஜீவ் கும்பல். வஞ்சிக்கப்பட்டு மோசம்போன மிஜோ கொரில்லாக்கள். அவர்களின் தலைவரும் பதவி பறிபோன முதல்வருமான லால்டெங்கா.

கட்சியிலிருந்து எட்டு எம்எல்ஏக்கள் விலகி மிஜோ தேசிய ஜனநாயக முன்னணி என்ற புதிய கட்சி அமைத்திருப்பதாக அறிவித்தனர். 40 உறுப்பினர்களைக் கொண்ட மிஜோ சட்டமன்றத்தில் 25 பேராக இருந்த மிஜோ தேசிய முன்னணி இதனால் 17 பேராகச் சுருங்கியது.

அதே சமயம் காங்கிரசுக்குச் சோரம் போய் கட்சி மாறிய எட்டு பேரும், காங்கிரசின் 13 எம்எல்ஏக்களும் சேர்ந்து கூட்டணி அமைத்துள்ளதாக, காங்கிரசு கவர்னரும் முன்னாள் அசாம் முதல்வருமான சைக்கியாவிடம் தாங்கள் அரசமைக்க அனுமதிக் கக்கோரினர். சட்டமன்ற துணை சபாநாயகரும் தங்கள் அணியில் இருப்பதால் தங்கள் அணியை 9 பேராகக் கணக்கிட வேண்டும் என்றும், எனவே தாய் கட்சியில் மூன்றிலொரு பற்கிற்கு மேலான உறுப்பினர்கள் வெளியேறியிருப்பதால் இது கட்சித்தாவல் அல்ல; கட்சியில் ஏற்பட்ட பிளவாக கருதவேண்டும் என்றும் வாதிட்டனர்.

ஆனால் ஆளும் மிஜோ முன்னணி கட்சியின் சபாநாயகர், கட்சி மாறிய எட்டுபேர் மீதும் கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டி, அவர்களை சட்டமன்ற உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்கம் செய்வதாக அறிவித்தார். துணை சபாநாயகர் ஆளும் கட்சியிலேயே இருப்பதால் கட்சி மாறிகளின் வாதம் செல்லாது என அறிவித்தார்.

எதிர்கட்சி ஆட்சியைக் கவிழ்க்க தாங்கள் தீட்டிய சதித்திட்டம் தோல்வியடைந்ததைக் கண்டு காங்கிரசு கும்பல் எரிச்சலடைந்தது. உடனே காங்கிரஸ் கவர்னர் 'எட்டுபேரை சட்டமன்ற உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்கி, சபாநாயகர் தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார். இது சட்ட விதிகளுக்கு முரணானது' என்று புழுங்கித் தள்ளினார்.

இதற்கிடையே மிஜோ காங்கிரசு எம்.எல்.ஏக்களை அவசரமாக டெல்லிக்கு அழைத்து ஆலோசனை நடத்திய பாசிச ராஜீவ், காங்கிரசு கூட்டணி அரசு அமைக்கும் வாய்ப்பு இழுபறியில் இருப்பதோடு, மீறி அரசமைத்தால் அம்பலப்பட்டு எதிர்ப்புகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என்றஞ்சினார். அதன்படியே எனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை. எதிரிக்கு இரண்டு கண்ணும் போக வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையோடு ஜனாதிபதி ஆட்சியை சர்வாதிகாரமாக அரங்கேற்றியுள்ளார்.

ஏற்கனவே கலவரப்பகுதி என காரணங்காட்டி வட கிழக்கு மாநிலங்களில் ராணுவ ஆட்சியே நிலவியது. இப்போது பெயரளவுக்கு இருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியையும் கலைத்து விட்டு ராணுவம் சுதந்திரமாக கலவரம் செய்யும் ஜனாதிபதி ஆட்சியை நிறுவியுள்ளது பாசிச கும்பல்.

எதிர்கட்சி ஆட்சிகளைக் கவிழ்ப்பது, உடைப்பது, கூட்டணி கட்டி காலைவாரி விடுவது என்பதே ஆளும் காங்கிரசு கும்பலின் பிறவித் தொழில். அதற்கான ஏஜெண்டுகளாக சேவை செய்வதே கவர்னர்களின் வேலை. அந்த வகையிலேதான் தமிழகத்தில் காங்கிரசு பெருச்சாளிகளும், அடிவருடி அலெக்சாண்டரும் செயல்படுகின்றனர். வரப் போகும் தமிழக தேர்தலில் காங்கிரசு கூட்டணி வெற்றி பெற வாய்ப்பில்லாத நிலைமை ஏற்பட்டால், திரிபுராவில் இனவெறியர்களைத் தூண்டி கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டு, ராணுவ ஆட்சியை அறிவித்து வெற்றி பெற்றதைப் போலவே, இங்கே வன்னியர்களைத் தூண்டி வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு குளிர்காய எத்தணிக்கின்றனர். ஒரு கட்சி சர்வாதிகார ஆட்சி அல்லது ஜனாதிபதி ஆட்சி என்ற பெயரில் பாசிச காட்டாட்சியை நிறுவ முயலும் காங்கிரசு கும்பலின் எத்தணிப்புகளை விழிப்புடனிருந்து உழைக்கும் மக்கள் முறியடிக்க வேண்டும்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# தொண்டு நிறுவனங்களா? கொத்தடிமைக் கூடாரங்களா?

மதுரை—உசிலம்பட்டியில் இயங்கும் கிருத்துவ நிறுவனங்களில் ஒன்று, டி.இ.எல் சி. கல்வி நிறுவனம். ஆரம்ப, நடுநிலை, மேல்நிலை, ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி என சங்கிலித் தொடர் கல்வி வியாபார நிறுவனம் இது. இந்நிறுவனத்தின் 'ஒழுக்கம்' 'கட்டுப்பாடு' மற்றும்கொள்ளைச் சுரண்டல், அங்கு கல்வி பயிலும் ஒரு மாணவியின் உயிரையே குடித்துவிட்டது.

இந்நிறுவனத்தின் விடுதியில் தங்கி ஆசிரியைப் பயிற்சி பள்ளியில் இரண்டாமாண்டு படிக்கும் மாணவி, குயின் பரிமளா. கடந்த 17.7 88 அன்று காலைப்பொழுது விடுதியிலிருந்து உடல் முழுக்க தீக்காயங்களுடன் மதுரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு 23.7.88 அன்று மருத்துவமனையிலேயே மரணமடைந்தார்.

விடுதியில் தங்கி படிக்கும் 56 மாணவியர்களுக்கு பெயரளவில் ஒரு சமையல்கார பெண்ணை வைத்துக் கொண்டு மாணவியர்களையே சமையல் வேலை செய்யச் சொல்லி மிரட்டி நடைமுறைபடுத்தியிருக்கிறது, நிர்வாகம். மாணவி குயின்பரிமளா தீயில் வெந்த சில தினங்களுக்கு முன்பு இருந்த ஒரு சமையல்கார பெண்ணும் சம்பளம் போதவில்லை என முறையிட, பயிற்சிப் பள்ளி முதல்வர் சுசிபெல்லா அவரையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

அதன் பின்னர், பள்ளியில் பணியாற்றும் தன்னுடைய கையாளான 'பியூன்' குழந்தைசாமியின் மனைவியை சமையல் வேலைக்கு அமர்த்தியிருக்கிறார். அவரையும் 17.7.88 அன்றுமுதல்வர் சுசிபெல்லா, தன்னுடைய சகோதரரும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் தாளாளருமான சாமுவேல் தேவராஜ் என்பவரின் அறுபதாவது பிறந்தநாள் விழாவுக்கு வேலை செய்ய திண்டுக்கல்லுக்கு அனுப்பிவிட்டார். எனவே, 17.7.88 அன்று விடுதியின் சமையல் வேலைக்கு மாணவி குயின் பரிமளாவையும் இன்னொருமாணவியையும் நிர்ப்பந்தப்படுத்தி அனுப்பியிருக்கிறது நிர்வாகம். சமையல்கார பெண் இல்லாததால் நான்கு மாணவியரையாவதுசமையலுக்கு அனுப்பச்சொல்லி கேட்ட மாணவியரின் கோரிக்கையையும் புறக்கணித்திருக்கிறது நிர்வாகம்.

அனுபவம் இல்லாத மாணவிகள், தட்டுதடுமாறி சமையல் வேலை செய்யும்போது எதிர்பாராதவிதமாக மாணவி குயின் பரிமளாவின் சேலை தீப்பிடித்து, சிகிச்சை பலனளிக்காமல் மரணமடைந்தார்.

பணப் பித்து பிடித்த டி.இ.எல்.சி நிர்வாகத்தின் லாபவெறிக்கும், முதல்வர் சுசிபெல்லாவின் அதிகார திமிர்த்தனத்தாலும் ஒரு அருமைச் சகோதரி கொடூரமான முறையில் மரணமடைந்தார்.



டி.இ.எல்.சி ஆசிரியை பயிற்சிப்பள்ளி, கொத்தடிமைக் கூடாரம், அப்பாவி மாணவிகளின் பலிபீடம்.

விபத்து நடந்த பிறகும் மாணவியின் சிகிச்சை பற்றி எந்த வித அக்கறையும் எடுக்கவில்லை நிர்வாகம். அந்த மாணவி பொது மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போதோ, மரணமடைந்த பிறகோ கூட மாணவியைச் சென்று பார்க்கவில்லை நிர்வாகம். மாறாக உண்மை வெளிவராமல் தடுக்க ஊழியர்களை மிரட்டி வைத்துள்ளது. செய்தி சேகரிக்கச் சென்ற தினகரன் நிருபரிடம் ''உசிலம்பட்டியிலுள்ள தன்னுடைய உறவினர் வீட்டிற்குச்சென்று அங்கே சமையல் வேலை செய்யும்போது குயின் பரிமளாவுக்கு தீ விபத்து ஏற்பட்டதாக'' புளுகியிருக்கிறது நிர்வாகம். தினகரனும் அதை அப்படியே செய்தியாக வெளியிட்டு விட்டது.

'டொனேஷன்', 'விடுதிமுன் பணம்', 'மெஸ்பீஸ்' என ஒவ்வொரு மாணவியரிடம் கல்வி காலத்திற்குள் ரூபாய் எட்டாயிரம் வரை பணம் பிடுங்கிய பிறகும் படிக்கும்மாணவியர்களுக்கு இந்த நிலைமை!

அனாதைகளுக்கு ஆதரவு கொடுப்பது, அறிவுக் கண்ணைத் திறந்து வைப்பது போன்ற சமூக சேவைகளில் தன்னிகரற்று விளங்கும் அமைப்புக்களாக கிருஸ்த்துவ மெஷினரி நிறுவனங்கள் விளங்குவதாக விபரம் தெரியாதவர்கள் நம்புவதுண்டு. கிருஸ்த்துவ நிறுவனங்களின் எச்சில்காசில் வயிறு வளர்க்கும் 'அறிவு' ஜீவிகள் திட்டமிட்டே இப்பொய் பிரச்சாரத்தை பெரிய அளவில் பரப்பி வருவதை தொழிலாகக் கொண்டுள்ளனர்.

சமூக சேவை என்ற மூடுதிரையின் பின்னே, 'ஒழுக்கம்', 'கட்டுப்பாடு' என்ற பெயரில் இந் நிறுவனங்களின் நிர்வாகம் தம்மிடம் பணிபுரியும் ஊழியர்களையும், மாணவர்களையும் சட்டபூர்வ கொத்தடிமைகளாக நடத்துக்கின்றன. மனிதத்தன்மையற்ற முறையில் அவர்களுடைய உழைப்பை பல வழிகளிலும் மிரட்டி சுரண்டுகின்றன என்பதை மாணவி குயின் பரிமளாவின் மரணம் நிரூபித்துக் காட்டுகிறது.

படம் மற்றும் தகவல்
பி. ராஜன் உசிலம்பட்டி

25.7.88 'தினகரன்' பொய் செய்தி


இளம்பெண் கருகிசாவு!
மதுரை ஜூலை
திண்டுக்கல்லை சேர்ந்தவர்
ஜெயராஜ் மாணிக்கம் இவரது மகள் குயின்
பரிமளா(வயது19) உசிலம் பட்
உறவினர் வீட்டுக்கு வந்து
இருந்தாள் சம்பவத்தன்று



படிப்பகம்

www.padippakam.com

## ஈழம் :

# விடுதலைக்கு எதிராக புலிகளின் பாசிச போக்குகள்

அன்புடன்... அறிவது. நலம் நலம். நாடுவதும் அதுவே என சம்பிரதாயமாக எழுதலாம். ஆனால் இங்கு எல்லாமே வேதனை தரும் நிகழ்வுகளாக நடைபெறுகின்றன.

18-7-1988 திங்கள் மாலை 8 மணி அளவில் நல்லூர் சட்டநாதர் வீதியில் நமது நண்பரும் உன்னதமான போராளியுமான T. விமலேஸ்வரன் (ஈஸ்வரன் பல்கலைக்கழக வளாகம்—கிளிநொச்சி) இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது மரணம் எவருமே அறியாதபடி மூடி மறைக்கப்பட்டு விட்டது. வளாகத்தில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த போது எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துப் பத்திரிக்கைகள் கொட்டான் எழுத்துக்களில் இவரது செய்தியைப் பிரசுரித்தனவோ அவ்வளவிற்கு சாதாரண மரண அறிவித்தலைக் கூட போட மறுத்துவிட்டன. அநாதரவான நிலையில் தெருவில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பூநகரியில் இவரது உறவினர்கள் பெற்றோர்களால் தகனம் செய்யப்பட்டார்.

இவரது மரணம் சம்பந்தமாகவும் தொடரும் கொலைகள் சம்பந்தமாகவும் இன்றும் புலிகள்-றோசின் கண்மூடித்தனமான முடாவடித்தனம் சம்பந்தமாகவும் அங்குள்ள முற்போக்குப் பத்திரிக்கைகளில் வெளிவர செய்ய முடியாதா? தினமும் இவ்விரு இயக்கங்களாலும் கடத்தல்—கொலைகள் தொடருகின்றன. அவ்வாறு வெளிவரச் செய்ய முடியுமானால் சகல செய்திகளையும் எடுத்து அனுப்ப முடியும். புதிய கலாச்சாரம், புதிய ஜனநாயகம் போன்ற இதழ்களில் வரச் செய்வீர்களா?

விமலேசின் கொலை சம்பந்தமாகவாவது இவற்றில் ஏதாவது தெரியப்படுத்த முடிந்தால் தெரியப்படுத்துங்கள். இவரது வரலாறு, எதற்காகக் கொல்லப்பட்டார், யாரால் கொல்லப்பட்டார் என்பது தெரியும்தானே. பல்கலைக் கழகப் போராட்டங்களில் நீதிக்காகவும் நேர்மைக்காகவும் தலைமை தாங்கிப் போராடியதால் கொல்லப்பட்டார். புலிகளால் கொல்லப்பட்டார்.

..................

நன்றி

.........

ஈழத்திலிருந்து இங்கு வந்து குடியேறியுள்ள புதிய ஜனநாயகம் வாசகருக்கு ஒரு ஈழத் தமிழர் யாழ் நகரிலிருந்து சமீபத்தில் எழுதிய கடிதம் இது. இத்துடன் கொலை செய்யப்பட்ட மாணவன் விமலேஸ்வரன் பற்றிய மேலும் சில தகவல்களையும் சேர்த்து அவர் அனுப்பியுள்ளார்.

1987 மத்தியில், மற்ற பிற போராளி அமைப்புகளுக்கும் மக்கள் திரள் அமைப்புகளுக்கும் புலிகள் தடை விதித்ததற்கு எதிராக, புலிகளின் பாசிசத்துக்கு எதிராக யாழ் பல்கலைக் கழக மாணவர் போராட்டத்தை ஒழுங்கமைத்த விஜிதரன் என்ற மாணவர் புலிகளால் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். விஜிதரன் கொலையைக் கண்டித்தும், மக்கள் திரள் அமைப்புகளைப் புலிகள் தடை செய்ததை எதிர்த்தும் ஜனநாயக உரிமை வேண்டி யாழ் பல்கலைக் கழக மாணவர் அமைப்புக் குழு போராட்டங்களை ஆரம்பித்தது.

இறுதிக் கட்டமாக 4 மாணவர்களும், 2 மாணவிகளும் உண்ணாவிரதம் இருந்தனர். அதை ஒழுங்கமைத்து பங்கேற்ற முக்கியமானவர்களில் ஒருவர், யாழ் பல்கலைக் கழக மாணவர் டி விமலேஸ்வரன். கிளிநொச்சி விவசாயி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு போராளி. சிங்களப் பேரினவாத அரசுக்கெதிராக, பல மாணவர் போராட்டங்களில் முக்கிய பங்காற்றிய முன்னணியாளர். புலிகளின் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராக, பிற போராளி அமைப்புகள் மக்கள் திரள் அமைப்புகளின் ஜனநாயக உரிமைக்காகப் போராடியதற்காக இப்போது புலிகளால் கொல்லப்பட்டார்.

விஜிதரனோ, விமலேஸ்வரனோ, இந்தக் கடிதங்களை எழுதிய வேறு ஈழத் தமிழர்களோ எந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். சிங்கள பாசிச ஜெயவர்த்தனே கும்பலின் பேரினவாதத்துக்கு எதிராகவும், இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும் போராடும் அதே வேளையில், ஈழத்திலுள்ள புரட்சிகர மற்றும் ஜனநாயக சக்திகளுக்கு எதிராக புலிகள் மேற்கொண்டுள்ள பாசிசத்தை எதிர்ப்பவர்கள்.

விமலேஸ்வரன் மட்டுமல்ல, பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்துக்குப் பிறகு ஏறக்குறைய நூற்றுக்கும் மேலான ஈழத் தமிழர்கள் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். ஈழ விடுதலைக்கு எதிரான துரோகிகளை அழித்தொழிப்பதில் தவறில்லை. போரில் ஈடுபட்டிருக்கும் வேளையில் அது அவசியமானதும் கூட. ஆனால் புலிகளால் கொல்லப்பட்ட ஈழத் தமிழரில் பாதிப் பேருக்கு மேலானவர்கள் இந்திய ஆக்கிரமிப்பையும், சிங்களப் பேரினவாதத்தையும் எதிர்க்கும் போராளிகள். ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்று துரோகமிழைத்த ஈ. பி. ஆர். எல். எஃப் டெலோ, ஈ. என். டி. எல். எஃப், பிளாட் போன்ற அமைப்புகளிலிருந்து வெளியேறியவர்கள்.



இந்திய அதிகாரிகளுடன் புலிகள் நடத்திய பேரம்.

ஈழத்தின்மீது தமது ஏகபோக ஆதிக்கத்தை நிறுவுவதற்காக சக போராளிகளையே, தன் இன மக்களையே படுகொலை செய்யும் புலிகளின் பாசிசம்; இந்திய உளவு படையான "ரா"வுக்கு போராளி



படிப்பகம்

www.padippakam.com

களை அடகு வைத்ததோடு அதன் தூண்டுதலால் சிங்கள சிவிலியன்களைப் படுகொலை செய்த புலிகளின் தேசிய இனவெறி—இவை ஈழ விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்திப் பின்னுக்குத் தள்ளுவதற்கான முக்கியமான காரணங்களாக அமைந்தன. இதனால் 1987 ஆரம்பத்தில் சிங்கள இனவெறி இராணுவம் முன்னேறித் தாக்கி ஈழத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் மீண்டும் தனது ஆதிக்கத்தை நிறுவிட முடிந்தது. பாசிச ராஜீவின் இராணுவ தலையீட்டிற்கு வாய்ப்பேற்பட்டது.

இப்போதும் பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பலின் மேலாதிக்கத்தின்கீழ் ஈழத்தின் ஏகப் பிரதிநிதியாகவும், ஏறக்குறைய 150 கோடி ரூபாய் விலையும் கோரும் புலிகளின் பேரம் தொடர்கிறது. இதை அடைவதற்காகவே சக போராளிகளைகொல்வதையும் புலிகள் மேற்கொள்ளுகின்றனர். ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்று துரோகமிழைத்துவிட்டவர்களையும் எதிரிகளின் உளவாளிகள்—கைக்கூலிகளையும் தான் அழித்தொழிப்பதாகப் புலிகள் புளுகுகின்றனர். சிங்களப் பேரினவாதத்தையும், இந்திய ஆக்கிரமிப்பையும் எதிர்க்கும் புரட்சிகர, ஜனநாயக சக்திகளைத்தான் முக்கியமாகப் புலிகள் தேடிக் கொல்கிறார்கள்.

இந்த உண்மைகளை புதிய ஜனநாயகம் எழுதுவதைக் கண்டித்து வெளிநாடுகளில் தஞ்சம்—புகுந்துள்ள குடியேறியுள்ள புலிகளின் ஆதரவாளர்கள் சிலர் அவ்**வப்போது கடிதம்எழுதுகின்றனர் அவர்களில் எவருமே எமதுகுற்றச்**சாட்டுகளுக்குத் துளியும் பதில் எழுதவில்லை. மாறாக புதிய ஜனநாயகத்துக்குப் பிரபாகரன் பாணியில் சவால் விடுவதும், பிரபாகரனின் தனிநபர் துதிபாடுவதாகவும் மட்டுமே உள்ளது. அதுமட்டுமல்ல, புலிகளுக்கு நிதி உதவி செய்வது பிரச்சாரம் செய்வது என்கிற பெயரில் இவர்கள் சில பண்பாடுகெட்ட வேலைகளிலும் இறங்கியுள்ளதாக அறிகிறோம். தமிழ்நாட்டிலே செல்லாக் காசுகளாகிவிட்ட சில ஓட்டுப் பொறுக்கிகள்—பிழைப்புவாதிகள் மற்றும் துணை நடிகை கற்பழிப்பு புகழ் பாண்டியன், ஆபாச நடிகை ஜெயமாலினி போன்றவர்களை அமெரிக்க—ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்து நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர்.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலை என்ன? காலமும் காரணங்களும் பாசிச ராஜீவ் ஜெயவர்த்தனே கும்பலை வேகமாக விரட்டுகின்றன. இன்னும் ஒன்றரை ஆண்டு காலத்திற்குப் பல தேர்தல்களை அவர்கள் சந்தித்தாக வேண்டும். அதற்காக எவ்வளவு ஈழத் தமிழர்களை கொன்று குவித்தாலும் சரி, எவ்வளவு இந்தியப் படையினரைப் பலி கொடுத்தாலும் சரி என்று மூர்க்கமான போரில் அவர்கள் இறங்கி, மூன்றாவது சுற்றிவளைத்து நசுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் தலைமைத் தளபதிகள் பலரும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். சமீப காலங்களில் கணிசமான அளவு இழப்புகள் நேர்ந்துள்ளதாகப் புலிகளும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தங்களை மிகவும் அறிவார்ந்த அரசியல் மேதைகள் என்றும் திறமை வாய்ந்த இராணுவத் தளபதிகள் என்றும் பீற்றிக் கொள்ளும் பாலசிங்கம்—பிரபாகரன் தலைமையிலான புலிகள், இந்த நிலையிலும் பாசிச தேசிய இனவெறியில்தான் மூழ்கிக் கிடக்கிறார்கள். உலகிலேயே நான்காவது பெரிய இராணுவத்தையும், அதற்கு ஆதரவான உலக வல்லரசுகளை எதிர்த்த போரில் சாத்தியமான அனைத்துச் சக்திகளின் ஆதரவு இன்றி வெற்றி பெற முடியாது என்கிற சாதாரண உண்மையையும் அறியாத—ஏற்க மறுக்கும் மரமண்டையர்களாக (DIEHARDS) இருக்கிறார்கள்.

சிங்களப் பேரினவாதத்தையும், இந்தியஇராணுவ ஆக்கிரமிப்பையும் ஆரம்பமுதல் உறுதியாக எதிர்த்து ஈழ மக்கள் விடுதலையில் பங்கேற்றும் ஆதரித்தும் வந்திருக்கின்றன இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள புரட்சிகர மற்றும் ஜனநாயக சக்திகள். விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்குமான ஈழ மக்களின் போராட்டத்தில் பங்கேற்பதற்கான முழு உரிமையும் இவர்களுக்கு உண்டு. அதை மறுப்பதும் புரட்சிகர மற்றும் ஜனநாயகப் போராளிகளைக் கொலை செய்வதும் பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்டலுக்கு உதவுவதும் ஈழ மக்களுக்குத் துரோகமிழைப்பதுமாகும்.

● மாணிக்கவாசகம்

## பட்டை நாமம் ஊழியர்களுக்கு!
## சலுகை சம்பளஉயர்வு அதிகாரிகளுக்கு!

மன்னார்குடி கூட்டுறவு நகரவங்கி. மன்னார்குடி, கீழராஜ வீதியிலுள்ள இக் கூட்டுறவு வங்கி, மிகப் பழமையான வங்கிகளில் ஒன்று. ஆண்டுக்கு சுமார் 2 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டும் இவ்வங்கியில் கடந்த 8 ஆண்டுகளாக ஊழியர்களின் ஊதிய விகிதம் மாற்றியமைக்கப் படவில்லை. கடந்த 4 ஆண்டுகளாக பஞ்சப்படி உயர்வும்அறவே வழங்கப்படவில்லை.

'85ஆம் ஆண்டிலிருந்து இக் கோரிக்கைகளை நிறைவேற்றச் சொல்லி ஊழியர்கள் பல கட்ட போராட்டங்களை நடத்தினர். பணியின் இடைவேளையின் போது ஆர்ப்பாட்டம், ஒருநாள் ஒட்டுமொத்த விடுப்பு, உண்ணாவிரதம் என தங்கள் கோரிக்கைகளின் நியாயத்திற்காக தொடர்ந்து போராடினார்கள். வங்கியின் தனி அதிகாரியான நவநீதகிருஷ்ணனிடம் கோரிக்கை வைத்த ஊழியர்களுக்கு "உங்கள் தலையெழுத்து அவ்வளவுதான்" என நக்கலான பதில்தான் தொடர்ச்சியாக கிடைத்தது.

ஆனால் நவநீதகிருஷ்ணனுக்கு மட்டும் வங்கிப் பணத்திலிருந்து தவறாமல் பஞ்சப்படி, ஊதிய உயர்வு, ஊக்க தொகை அத்தனையும் உண்டு.

பொறுத்துப் பார்த்த ஊழியர்கள், ஆகஸ்ட் 22-ம்தேதி முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தை வெற்றிகரமாக தொடர்ந்தார்கள். வங்கிப்பணத்தை தன்னுடைய ஊதாரித்தனத்திற்கும், ஊழலுக்கும் இரையாக்கிக் கொள்ளும் நவநீதகிருஷ்ணனுக்கு ஊழியர்களின் போராட்டத்தை சகித்துக்கொள்ள முடியவில்லை. மேல் அதிகாரிகளின் துணையுடன் கூட்டுறவு துணைப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து மாற்று ஊழியர்களைக் கொண்டு வந்து வங்கியில் பணிபுரிய ஏற்பாடு செய்தார். தொழிலாளர்களின் கட்டுக்கோப்பான உறுதியினால், வங்கிக்குள் நுழைந்தமாற்று ஊழியர்கள் வெளியேற்றப்பட்டார்கள். வங்கி நிர்வாகம் வழக்கம்போல் 'காவல்' துறையை துணைக்கு அழைத்துள்ளது.

ஓட்டுப் பொறுக்கிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாக இருந்தாலும் சரி. 'நிர்வாக'ப்புலி' அலெக்சாண்டரின் ஆட்சியாக இருந்தாலும் சரி அடிதட்டு மக்களுக்கு கிடைக்கும் பரிசு அடக்குமுறையும், குறைந்த கூலிக்கு வரைமுறையற்ற உழைப்பு சுரண்டலும்தான்! விடாப்பிடியான போராட்டத்தின் மூலம்தான் பாதிக்கப்பட்ட வங்கி ஊழியர்களும் உழைக்கும் மக்களும் இந்த விஷச் சூழலிருந்து விடுபட முடியும்!

—சோம. சிவகுமார்
மன்னார்குடி



படிப்பகம்

www.padippakam.com

## ராஜீவ்-ரே-ரிபைரோ

# பாசிசகும்பலின் ரகசியகொலைபடை!

“சித்தால் தாஸ்—சீனியர் சூப்பிரெண்டண்ட்; பல்தேவ்சிங் பிரார்—சூப்பிரெண்டண்ட் (உளவுப் பிரிவு) ஆகிய இரு பஞ்சாப் போலீசு அதிகாரிகள். இவர்களை பஞ்சாப்—பட்டியாலா போலீசு நிலையத்தில் வைத்து தல்பீர் சிங் என்ற ஒரு உதவி சப்-இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொன்று விட்டான். தானும் சுட்டுக் கொண்டு மாண்டு போனான்” என்று சென்ற மாதம் இந்திய வானொலிச் செய்திஒன்று கூறியது.

“பஞ்சாப் கவர்னரின்ஆலோசகர் ரிபைரோ போட்ட உத்திரவின் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, நிராயுதபாணியாக்குவதற்காக விசாரிக்கப்படும்போது ஒரு உதவி சப் இன்ஸ்பெக்டர் இரு சீனியர்—உயர் போலீசு அதிகாரிகளைச் சுட்டுக்கொன்றுவிட்டான். சுடப்பட்ட போலீசு அதிகாரிகளில் ஒருவர் சுட்டதில் அவனும்மாண்டு போனான்” என்று அடுத்த நாள் பத்திரிகைகளில் செய்தி வந்தது.

“பஞ்சாபில் இரண்டு உயர் போலீசு அதிகாரிகளை ஒரு உதவி சப் இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொன்றான். அங்கிருந்த மற்றபோலீசார் அவனை சுட்டுக் கொன்றனர்” என்று வெளிநாட்டு வானொலிகள் கூறின.

தல்பீர் சிங் இரு உயர் போலீசு அதிகாரிகளைச் சுட்டுக் கொன்றான் என்பது மட்டுமே இந்த மூன்று ஆதாரங்களில் இருந்துஅறியக்கூடிய உண்மையான செய்தி. தல்பீர் சிங் எப்படி, யாரால் சுட்டு கொல்லப்பட்டான்? அந்தச்செய்தியில் ஏன் இப்படி முரண்பாடுகள்? போகட்டும். பஞ்சாபில் அரசு—சீக்கியப்பயங்கரவாதங்களுக்கிடையே நடக்கும் சண்டையின் காரணமாக தினசரி வரும் சாவுச் செய்திகளில் இதுவும் ஒன்று; நிராயுதபாணிகளைப் பிடித்து, போலியான மோதல் நாடகமாடி போலீசார் சுட்டுக் கொல்லும் சம்பவங்கள் பல நடக்கும்போது போலீசு அதிகாரிகளைக் கொன்றவனைப் பழி தீர்ப்பது அதிசயமல்ல, அதாவது வழக்கமாகிப் போனது—என்று ஒதுக்கிவிடக்கூடிய விவகாரம் அல்ல இது.

தல்பீர் சிங்



அவிந்தர் சிங் பிரார் மற்றும் கே.ஆர்.எஸ்.ஜில் ஆகிய இருவரும் இதே பதவிகளில் இருந்தவர்கள். இந்த ஆண்டு ஜனவரியில் இதே பட்டியாலா விளையாட்டு மைதானத்தில் காலை உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டனர் அவ்விருவரையும் கொன்றவர்கள் பஞ்சாப் போலீசுப் படையைச் சேர்ந்தவர்கள்தான். வேலை நீக்கம் செய்யப்பட்டு, சீக்கியத் தீவிரவாதிகளுடன் சேர்ந்து கொண்டு அந்த இரு உயர்போலீசு அதிகாரிகளையும் ஒழித்துக் கட்டினார்கள். அது போல சீக்கியத் தீவிரவாதிகளுடன் சேர்ந்தவனாகத்தான் இப்போது இரு உயர் போலீசு அதிகாரிகளைக் கொன்ற உதவி சப் இன்ஸ்பெக்டர் தல்பீர் சிங் இருப்பான் என்று இந்திய—வெளிநாட்டு வானொலி, பத்திரிக்கைச் செய்தியை வைத்து முடிவு செய்யும்படி இருந்தது. உடனடியாகப் பழிவாங்குவதற்காக தல்பீர்சிங் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பான் என்றே நம்ப வேண்டி இருந்தது.

ஆனால் இந்தச் சம்பவத்துக்குப் பின்னே ரத்தத்தை உறைய வைக்கும்—அதிர்ச்சியூட்டும் ஒரு இரகசியமும் ஒளிந்து கொண்டிருப்பது இப்போது வெளி வந்துவிட்டது. சீக்கியத் தீவிரவாதிகளையும், சந்தேகப்படும் சீக்கிய இளைஞர்களையும் தேடி வேட்டையாடுவதற்கும் ஊடுருவவும், உளவு பார்க்கவும், இரகசியமாக அவர்களைக் கொலை செய்யவும் ராஜீவ் ரே-ரிபைரோ ஆகியகொலை வெறியர்கள் கட்டியுள்ள இரகசியக் கொலைப் படையைச் சேர்ந்தவன் இந்த தல்பீர் சிங். கிரிமினல் குற்றங்கள் செய்து தண்டனை பெற்ற போலீசார், கிரிமினல் குற்றவெறியுடைய போலீசார் மற்றும் கிரிமினல் குற்றங்கள் செய்வதையே தொழிலாகக் கொண்ட சமூக விரோதிகள் ஆகியோரைக் கொண்டு கட்டப்பட்டது இந்தக் கொலைப்படை.

தல்பீர் சிங் சீக்கியத் தீவிரவாதிகளைச் சேர்ந்தவன் அல்ல. ராஜீவ்—ரே-ரிபைரோகட்டி சீக்கியரைக் கொல்வதற்காக ஏவிவிட்டுள்ள இரகசியக் கொலைப்படையின் முக்கியப் புள்ளியும், குறிப்பாக ரிபைரோவின் நேரடி ஆதரவு பெற்ற செல்லப் பிள்ளையும் ஆவான். வினை விதைத்தவர்கள் வினையை அறுவடை செய்கிறார்கள் — இதுதான் பட்டியாலா கொலைச் சம்பவம். இந்த தல்பீர் சிங் விவகாரத்தை அப்படியே அமுக்கிவிட அவசர அவசரமாக பாசிசக் கொலைவெறிப் படைத் தளபதி ரிபைரோ முயன்றதன் அவசியம் — இரகசியம் இப்போது தெரிந்துவிட்டது.

### ராஜீவ்–ரே–ரிபைரோ அமைத்த கொலைப்படை

பொற்கோவிலின் மீது அதிரடித் தாக்குதல் தொடுத்த “நீல நட்சத்திர நடவடிக்கை”; பஞ்சாபின் கிராமப் புறங்களில் சீக்கிய இளைஞர்களை வேட்டையாடிய “காட்டு ரோஜா நடவடிக்கை” மூலம் ஏறக்குறைய 5000 சீக்கியரைப் படுகொலை செய்தது பாசிச இந்திரா கும்பல். பழி வாங்குவதற்காக இந்திராவையே சீக்கியத் தீவிரவாதிகள் குறி வைத்துக் கொன்றனர். அடுத்து ஒரு வாரம் தலைநகர் புதுடில்லியிலும் பிற வட இந்திய நகரங்களிலும் இந்திரா காங்கிரசு ரௌடிகள் நடத்திய கொலை வெறியாட்டத்தில் கோரமான—மிருகத்தனமான முறையில் மேலும் 5000 சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த நரவேட்டைக்குத் தலைமையேற்ற பகத், டைட்லர், லலித் மகான் போன்ற பாசிச குண்டர் படைத் தலைவர்களுக்குப் பதவி அளித்து கௌரவித்தது ராஜீவ் கும்பல்.

முதலில் டெல்லிப் படுகொலைகளை நியாயப்படுத்திய ராஜீவ், லோங்கோவாலுடன் போட்ட பஞ்சாப் ஒப்பந்தத்தில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்ப



படிப்பகம்

www.padippakam.com

தாக உறுதி மொழி கொடுத்தார். அதற்கான விசாரணையை இழுத்தடித்தும், முடிவுகள் வந்த பிறகும் குற்றவாளிகளைத் தண்டிக்காது காத்தும் வந்தார் ராஜீவ். சீக்கியத் தீவிரவாதிகளே அவர்களில் சிலரை அழித்தொழித்தனர். பஞ்சாப் ஒப்பந்தம் துப்பாக்கித் தோட்டாக்களால் துளைக்கப்பட்டது. பச்சை ரத்தம் குடிக்கும் வெறி அடங்காத பாசிச ராஜீவ் சீக்கியர்களைக் கொன்று குவிப்பதற்கு என்றே சித்தார்த்த சங்கர் ரேயையும் ரிபைரோவையும் அனுப்பி வைத்தார்.

“கொலைக்குக் கொலையே பதில்” “தீவிரவாதிகள் ஒரு போலீசுக்காரனைக் கொன்றால் நீங்கள் பத்து தீவிரவாதிகளைக் கொல்லுங்கள்.” “தீவிரவாதி உங்களைக் கொல்வதற்கு முன் நீங்கள் அவனைக் கொன்று விடுங்கள்” என்று பகிரங்கமாகவே வெறியேற்றினார் ரிபைரோ. அப்பாவி சீக்கிய இளைஞர்களையும், நிராயுதபாணிகளான சீக்கிய தீவிரவாதிகளையும் பிடித்து நேருக்கு நேர் சுட்டுக் கொன்று பயபீதியை—அரசு பயங்கரவாதத்தைப் பரப்பினார். இந்தப் படுகொலைகளை எல்லாம் “போலீசுடனான மோதல்” என்று கூறினார். பாகிஸ்தான் எல்லையில் இருந்துவிரட்டப்பட்ட வங்கதேசக் குடிமக்களை “ஊடுருவ முயன்றவர்கள்” என்று கூறிச் சுட்டுக் கொன்றனர். பஞ்சாப் சீக்கிய மக்களே சந்தேகத்துக்குரிய தீவிரவாதிகள் என்று சந்தேகப்பட்டுப் பிடித்துக் கொடுத்தவர்களை வயல் வெளிகளுக்கு இழுத்துப் போய் சுட்டுக் கொன்றனர்— இதையும் “போலீசுடனான மோதல்” என்றார்.

“போலீசுடனான மோதல்” என்பது படுகொலைகளை மறைப்பதற்கான பொய்யான நாடகம் என்று சீக்கிய மக்களும், அகாலிகளும், சிவில் உரிமை அமைப்புகளும் குற்றஞ் சாட்டின. அதை அடியோடு மறுத்த ரிபைரோ ‘இது யுத்தம், சிலசிவிலியன்களும் பலியாகலாம்’ என்று திமிரோடு கூறினார். பஞ்சாப் போலீசை ஒழுங்கு படுத்தி அதன் தார்மீக போரிடும் உணர்வு மட்டத்தை ரிபைரோ உயர்த்தி விட்டார் என்று “தேசிய” பத்திரிக்கைகள் ஏகமனதாகப் பாராட்டின. டிஜிபி பதவியில் ஓராண்டு நீட்டிப்புப் பெற்ற ரிபைரோ, கவர்னரின் ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்று மேலும் இரண்டு ஆண்டுகள் பதவி நீட்டிப்புப் பெற்றார். பத்திரிக்கையாளர்களைக் கூட்டி தனது கொலைப்பட்டியலை வாசிப்பதே ரிபைரோ தனது அன்றாட சாதனையாக செய்து வந்தார். குறிப்பாகக் கடந்த ஓராண்டில் பல முதல்தர, இரண்டாந்தர சீக்கியப் பயங்கரவாதிகளைச் சுட்டுக் கொன்றுவிட்டதாக வெற்றி வெறியோடு அறிவிக்கிறார் ரிபைரோ.

உண்மை என்னவென்றால் ராஜீவ்—ரே—ரிபைரோ கும்பல் கிரிமினல்களை வைத்துக் காட்டியுள்ள ஒரு இரகசிய—அதிரடிக் கொலைப்படைதான் இந்தப் படுகொலைகளைச் செய்துவருகிறது. நாட்டின் சட்ட திட்டங்கள், விதிமுறைகள், ஒழுங்கு கட்டுப்பாடுகள் எதற்குமே அடங்காத, சகலத்திற்கும் அப்பாற்பட்ட தனி அதிகாரம் பெற்ற இரகசிய—அதிரடிக் கொலைப்படை இது. கண்ணி வைத்துவிட்டுக் காத்திருக்கும் வேட்டைக்காரன்களுக்கு முந்திப் பாய்ந்து குறிகளை—பிராணிகளைக் கவ்விப் பிடித்துக் கடித்துக் குதறும் வேட்டை நாய்களைப் போன்றவர்கள் இவர்கள்.

ஜெர்மானிய மக்களின் சர்வாங்கத்தையும் நெறித்துக் கொண்டிருந்தது பாசிச இட்லரின் எஸ்.எஸ் என்ற இரகசியப் போலீசுப்படை. அதற்குள் தெரிந்தெடுக்கப்பட்ட இரகசிய—அதிரடிக் கொலைப்படையாக “கெஸ்டபோ” என்கிற உளவுப் படையைக் கட்டிக் கொண்டான் இட்லர். அப்படிப்பட்டதுதான் இந்த ராஜீவ்—ரே—ரிபைரோவின் கொலைப்படை. “முன்னெச்சரிக்கைத் தாக்குதல் குழுக்கள்” என்றும், “எதிரி மையங்களைக் குறித்து உளவு பார்ப்பவர்கள்” என்றும் “மறைமுகப்படை” என்றும் அவர்கள் இந்த இரகசிய அதிரடிக் கொலைப்படையைக் குறிப்பிடுகிறார்கள்.



எஸ்.எஸ்.பி சித்தால் தாஸ்



எஸ்.பி பல்தேவ் சிங் பிரார்

## ரிபைரோ மறைத்ததும் ஒப்புக் கொண்டதும்

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இரகசிய அதிரடிக் கொலைப்படைக் குழுக்களைக் கூலிக்கு அனுப்பியிருப்பதாக மாநில அரசுக்கு எதிராக மக்கள் உரிமை அமைப்புகள் குற்றஞ் சாட்டிய போது திட்டவட்டமாக மறுத்தார் ரிபைரோ. சென்ற மாத ஆரம்பத்தில் சர்வதேச மனித உரிமை அமைப்பு இந்தியாவில் மனித உரிமை மீறல்கள் நடப்பதாக, “போலீசுடன் மோதல்” என்கிற பெயரில் கொலைகள் நடப்பதாக குற்றஞ் சாட்டியது. பட்டியாலா போலீசு அதிகாரிகள் சாவுக்குப்பிறகும், இரகசிய—அதிரடிக் கொலைப்படை பற்றிய உண்மைகள் வெளிவந்த பிறகும் பாசிச ராஜீவ் கும்பலின்கொலைப் படை மந்திரி சிதம்பரம், நாடாளுமன்றத்தில் அதை மறுத்தார். சர்வதேச மனித உரிமை அமைப்பின் குற்றச் சாட்டுகளை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. அதற்குப் பதிலளிக்கும் பொறுப்பு நமக்கில்லை என்று ஆணவத்தோடு மறுத்தார். ஐ.நா சபை மனித உரிமை சாசனத்தில் முதலாவதாகக் கையொப்பமிட்டது குறித்துக் கொஞ்சமும் வெட்கமின்றி, தென் ஆப்பிரிக்க, இஸ்ரேலிய மனித உரிமைமீறல்கள் குறித்து கூச்சல் போடுவதையும் மறந்து பஞ்சாப் படுகொலைகளை நியாயப்படுத்தினார்.

ஆனால் பட்டியலா போலீசு அதிகாரிகளைப் பலி கொடுத்த பிறகு, இரகசியம் பட்டவர்த்தனமானபிறகு பாசிசக் கொலை வெறிப்படையின் தலைமைத் தளபதி ரிபைரோ கூறுகிறார்: “மறைமுக உளவாளிகளைப் பயன்படுத்திக் கொள்வதில் வழக்கத்துக்கு மாறானது எதுவும் இல்லை. உலகம் முழுவதிலும் உள்ள போலீசார் இம்மாதிரியான மறைமுக உளவாளிகளின் உதவி பெறுகிறார்கள். தல்பீர் போன்ற நபர்களை நாங்களும்கூட பயன்படுத்தி வருகிறோம் என்ற



படிப்பகம்

www.padippakam.com




சித்தார்ந்த சங்கர்ரே




ரிபைரோ

உண்மையில் சந்தேகமே வேண்டாம்.''

பஞ்சாப் டிஜிபியாகப் பதவியேற்றதும் ரிபைரோ செய்த முதற் காரியமே போலீசுக் கிரிமினல்களையும் தொழில் முறை கிரிமினல்களையும் வைத்து இரகசிய—அதிரடிக் கொலைப்படையைக் கட்டியதுதான். இப்போதும்கூட, ''தல்பீர்சிங்கின் சாவால் ஒரு வெற்றிடம் ஏற்பட்டுவிட்டதே'' என்று வருந்துகிறார் ரிபைரோ. ''இரண்டு அதிகாரிகளையும் துரதிருஷ்டவசமாக கொல்லவில்லை என்றால் இது பத்திரிக்கைகளில் வெளியே வந்திருக்காது'' என்று கவலையுடன் கூறுகிறார்.

''செய்திகளைச் சேகரிப்பதற்கு ஒற்றர்களின் வலைப்பின்னலை அரசாங்கம் பயன்படுத்தவில்லையா? அது சட்டபூர்வமானதா? பஞ்சாபில் நடக்கும் பிரகடனப்படுத்தப்படாத இந்தப்போரில் கொலையாளிகளைத் தேடி அறிவதுதான் முக்கியமாக இருக்கிறது'' என்று சட்டபூர்வ நியாயவாதம் பேசுகிறார் பாசிச தளபதி ரிபைரோ.

இப்போதைய டிஜிபியும் ஐஏஎஸ் பெண் அதிகாரியை மானபங்கப் படுத்தியவருமான கேபிஎஸ்ஜில் ''இரகசியக் குழுக்களை உருவாக்குவது ஒரு கொள்கையாக இருக்கிறது'' என்று உறுதிப்படுத்துகிறார். ''எதிரியின் மறைவிடங்களைக் குறித்து உளவறியும்தனிச்சிறப்பான குழுக்கள் இல்லாமல்பஞ்சாபில் பாதுகாப்புப் படைகள்எதுவும் செய்யமுடியாது. அவற்றைக் கலைத்துவிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.'' என்று கறாராகக் கூறுகிறார் ஜில்.

பாசிச கொலைவெறிப்படையின் தளபதிகள் கூறுவது போல உளவறிவதும், காட்டிக்கொடுப்பதும் மட்டும் இந்த இரகசிய—அதிரடிக் கொலைப்படையின் வேலை அல்ல. சீக்கியரைப் படுகொலை செய்து ராஜீவ்—ரே-ரிபைரோ கும்பலைக் குளிப்பாட்டுவதுதான் இதன் வேலை. அமிர்தசரசு சீனியர் சூப்பிரண்டெண்ட் முகமது இஜார் ஆலாம்தான் இப்படி ஒரு கொலைப்படையைக் கட்டும் யோசனையைக் கண்டுபிடித்தார் என்கிறார்கள்! சீக்கியத் தீவிரவாதிகளுடனான போரில் உடனடி பலன்கிட்ட வேண்டுமானால் சட்டத்துக்குப் புறம்பான வழிகளில் செயல்பட வேண்டியதன் அவசியத்தை அவர்தான் முதலில் வலியுறுத்தினாராம்! ஆனால் ரே-ரிபைரோ கும்பலுக்கு இது ஏற்கனவே கைவந்தகலை. குறிப்பாக இதே நோக்கத்துக்காகத்தான் அவர்கள் பஞ்சாபுக்கு அனுப்பப்பட்டார்கள்.

ராஜீவ்—ரே-ரிபைரே கும்பலின் திட்டப்படி இரகசிய—அதிரடிக் கொலைப்படையின் நோக்கம் சீக்கியத் தீவிரவாத அமைப்புகளுக்குள் ஊடுருவி உளவு பார்ப்பது. தீவிரவாதிகளைச் சுற்றிவளைத்து சாத்தியமானபோதெல்லாம் உடனடியாக சுட்டுக் கொல்வது ஆகியனதான். ஆனால் தீவிரவாதக் குழுக்களுக்குள் ஊடுருவுவதற்காக இந்த இரகசிய அதிரடிக்கொலைப்படையே தீவிரவந்த கொலை கொள்ளைகளைச் செய்யவும் வழிகாட்டப்பட்டன. 1986-இல் அமிர்தசரசு நகரின் சௌக் மேத்தா பகுதியில் ஒரு கொலை—கொள்ளையை இந்தப் படையினரே செய்தனர். பத்திரிக்கைகள் அதை அம்பலப்படுத்திய போது, அப்படி ஒரு படையே கிடையாது என்று ஆலம் திட்டவட்டமாக மறுத்தார்.

சில மாதங்களுக்குப் பிறகு ரிபைரோ, தனக்குத் தெரியாமல் ஒரு உளவுப்படை உருவாக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அது 1986 இறுதியில் கலைக்கப் பட்டுவிட்டது என்றார். உண்மையில் அந்த இரகசிய—அதிரடிக் கொலைப்படை கலைக்கப்படவில்லை. அதனுடைய கொடிய கிரிமினல்கள் இடமாற்றம் செய்யப்பட்டார்கள். உதாரணமாக 1986 அமிர்தசரசு கொலை—கொள்ளைக்குப் பிறகு தல்பீர்சிங் மற்றும் சந்தோக் சிங் கலா ஆகிய இரு கிரிமினல் போலீசுக்காரர்கள் முறையே பட்டியாலாவுக்கும் ஜலந்தருக்கும் மாற்றப்பட்டார்கள். கலா என்பவன் இன்னமும் ஜலந்தர் போலீசு அதிகாரிகளின் கீழே இயங்குகிறான்.

## ரிபைரோவின் செல்லப்பிள்ளை தல்பீர் சிங்கின் சாதனைகள்

ராஜீவ்—ரே-ரிபைரோ உருவர்க்கியுள்ள இரகசிய அதிரடிக் கொலைப்படையின் முக்கியஉறுப்பினர்—செல்லப்பிள்ளை தல்பீர் சிங். ஆறடி உயரமும் நல்ல உடற்கட்டும் வாய்ந்த பயமறியாத துணிச்சல்மிகு காளை என்று போலீசு அதிகாரிகளிடையே பெயர் பெற்றவன். ரிபைரோவுக்கு நேரடியாகத் தெரிந்தவன்—அவரது தனி மதிப்பைப் பெற்றவன். 1983 ஆம் ஆண்டு கிரிமினல்கள் மற்றும் கடத்தல்காரர்களுடன் கூட்டுச் சேர்ந்திருந்ததற்காக சாதாரண போலீசுக்காரனாயிருந்த தல்பீர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தான். 1986 இல் இரகசிய—அதிரடிக் கொலைப் படையை உருவாக்கியபோது அவையே தல்பீர் சிங்கின் அவசியமான தகுதியாகக் கருதி மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

மீண்டும் வேலையில் சேர்ந்ததும் முதல்தர சீக்கிய தீவிரவாதியான பரம்ஜித் சிங் என்பவனை தரன்தரன் நகரில் வைத்து சுட்டுக் கொன்றான் தல்பீர் சிங். மற்றொரு தீவிரவாதி சரண்ஜித் சிங்கைப் பஞ்சாப் பல்கலைக் கழக விடுதியில் வைத்துப் பிடித்துக் கொடுத்தான். இதனால் பிரபலமடைந்த தல்பீர், ரிபைரோவின் நேரடி கவனத்துக்கும் பாராட்டுக்கும் உரியவனானான். இரண்டாம் தர தீவிரவாதிகளான பல்வீந்தர் சிங் பிண்டா மற்றும் ஹர்மீந்தர் பிண்டி ஆகியோரை சண்டிகரில் வைத்து சென்ற ஆண்டு பிடித்துக் கொடுத்தான். பலகொலை — கொள்ளைக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட குர்பச்சன் சிங்கை மேகாளி கிராமத்தில் வைத்துப் பிடித்துக் கொடுத்தான்.

கே. சி. சர்மா என்றழைக்கப்பட்ட சுரீந்தர் சிங் என்ற முதல் தர தீவிரவாதியை சண்டிகர் நகரில் வைத்து இந்த ஆண்டு



படிப்பகம்

www.padippakam.com




அமிர்தசரசு எஸ்எஸ்பி ஆலம்　　கேபிஎஸ்.கில்

ஆரம்பத்தில் சுட்டுக் கொன்றான் தல்பீர் சிங். இது அவன் எதற்கும் துணிந்த 'மாவீரன்' என்ற பாராட்டை பஞ்சாப் போலீசாரிடையே பெற்றது. பல வாரங்கள் சர்மாவின் பின்னே சுற்றி உளவு பார்த்த தல்பீர் சிங் ரிபைரோவின் வீட்டுக்கு அருகிலேயே வைத்து சுட்டுக் கொன்றான். தல்பீரே ஒரு "பயங்கரவாதி" என்று கருதி சண்டிகர் போலிசார் துரத்திய போது தனது அடையாள அட்டையைக் காட்டி விட்டு ரிபைரோ வீட்டுக்குள் புகுந்தான்.

ஆனந்தக் களிப்பிலே மிதந்த ரிபைரோ பத்திரிக்கையாளர்களைக் கூட்டி "பஞ்சாப் சிறப்புப் பணிப்படையின் உளவுக் குழு ஒன்று கொடிய பயங்கரவாதியை ஒழித்துக் கட்டியது" என்று அறிவித்தார். தல்பீர் சிங்குக்கு இரட்டைப் பதவி உயர்வும் ஒரு ஜீப்பும், இரட்டைக் குழல் துப்பாக்கிகளுடன் இரண்டு மெய்க்காப்பாளர்களும் தரப்பட்டது. அதிகாரபூர்வமற்ற முறையில் இரண்டு கார்களும்கூட தரப்பட்டன. அன்றாட, வழமையான பணி எதுவுமில்லாமல் பட்டியாலாவில் உதவி சப்இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்ட தல்பீர், பஞ்சாப் முழுவதும் மட்டுமல்ல அண்டை மாநிலங்களிலும் அதிகாரம் செலுத்தினான்.

### இருபுறமும் கூரான ஆயுதம்— ஏந்தியவரையே பதம் பார்த்தது

சாதாரணமாக, சட்டபூர்வமாக அதிகாரம் "பெற்ற" போலீசுக்காரர்களின் அக்கிரமங்கள்—அட்டூழியங்கள், கிரிமினல் கும்பல்களின் அட்டகாசங்கள்—அடாவடித்தனங்கள் மக்களைக் குலை நடுங்க வைக்கின்றன. கடிவாளமில்லாத மிருகங்களாக ஏவிவிடப்பட்டுள்ள இரகசிய—அதிரடிப் படை இருபக்கமும் கூரான ஆயுதம். சீக்கிய தீவிரவாதிகளை மட்டுமல்ல. பிற சாதாரண மக்களையும், போலீசு அதிகாரிகளையுமே கூட குறிவைத்துக் தாக்குகிறது.

அமிர்தசரசு நகர இந்திரா காங்கிரசுத் தலைவரின் காரைத் துப்பாக்கியைக் காட்டிப் பிடுங்கிக் கொண்டு போனான் ஒருவன். புகார் கொடுப்பதற்கு அவர் தலைமைப் போலீசு அதிகாரியின் வீட்டுக்குப் போனபோது காரைப் பிடுங்கிச் சென்றவன் அங்கே இருந்தான். அதாவது அவன் இரகசிய—அதிரடிக் கொலைப் படையைச்சேர்ந்தவன். தலைமை அதிகாரியின் உத்திரவின் பேரில் ஒருவாரத்துக்குப் பிறகு காரைத் திருப்பிக் கொடுத்தான். ஆயுதங்களும் வெடி மருந்துகளும் ஏராளமாகக் கைப்பற்றுவதற்கு உளவு சொன்ன ஒருவன் தீவிரவாதிகள் கைவிட்டதாக ஒரு லாரியைக் கைப்பற்றிக் கடத்திப்போய் வேறொரு நகரில்விற்றான்.

ராஜீவ் — ரே-ரிபைரோவின் இரகசிய—அதிரடிக் கொலைப் படை தமது சொந்த நலன்களுக்காக கொலை—கொள்ளை—கடத்தல்கள், கட்டாய வசூல்களில் இறங்கியுள்ளது. இந்தப் படை கண்மண் தெரியாமல் அட்டகாசங்கள் செய்வதால் போலீசாரைப் பற்றிய மதிப்பு பரவலாக பாதிக்கப்படுகிறது என்று எல்லைப் பாதுகாப்புப்படையின் டிஐஜி ஒருவர் ரிபைரோவிடம் நேரடியாகவே புகார் செய்துள்ளார். போலீசு இலாகாவுக்குள்ளேயே பல குறிப்பான புகார்களும் எதிர்ப்புகளும் வலுத்து வருகின்றன.

சீக்கியத் தீவிரவாதிகளை உயிருடனோ,பிணமாகவோ பிடித்துத் தருபவருக்கு அல்லது அதற்குத் துப்புச் சொல்பவருக்கு இவ்வளவு ரூபாய் பரிசு தரப்படும் என்று—அதாவது முதல் தர தீவிரவாதிக்கு மூன்று லட்சம் ரூபாய், இரண்டாம் தர மானால் 2 லட்சம் ரூபாய், மூன்றாம் தரமானால் ஒரு லட்ச ரூபாய் என்று—விலை நிர்ணயம் செய்துள்ளது அரசு. இந்த ஊக்கத் தொகையைப் பெறுவதற்காக இரகசிய—அதிரடி கொலைப்படைக்கும் சாதாரண போலீசாருக்கும் இடையே போட்டியும் பொறாமையும் நிலவுகிறது.

இரு போலீசு அதிகாரிகளைச் சுட்டுக்கொன்ற தல்பீர்சிங் இதுவரை 5 லட்சத்துக்குமேல் ஊக்கத் தொகை சம்பாதித்தான். தடையே இல்லாத எல்லா அதிகாரமும் பெற்றிருந்த தல்பீர் சிங் மேலும் பல கிரிமினல் குற்றங்கள் செய்வதாக புகார் வந்தது. தல்பீர் சிங்கினால் கொல்லப்பட்டவர்களில் பலர் சீக்கியத் தீவிரவாதிகள் அல்ல. வங்கிகளைக் கொள்ளையிடும் போட்டிக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள். தல்பீர் சிங்குக்கு உரிய பங்கு தராததால் அவர்களைக் கொன்றான் என்பது புகாரில் தெரியவந்தது. சாதாரண மக்களிடம் இருந்தும் அவன் மாமூல் வசூலித்தான். பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீரில் உள்ள போட்டி கடத்தல் கும்பல்கள் தரும் "கூலி"க்காக நபர்களைக் கடத்தி பயபீதியூட்டி காரியம் செய்ய உதவினான்.

சண்டிகர் நகரில் உள்ள தையலக முதலாளி சாகீர் அகமது. அவரிடம் ரூ. 50,000 தரும்படி நிர்ப்பந்தம் செய்தான், தல்பீர். அவர் மறுக்கவேஅவரது வீட்டைச் சோதனையிட்டு மூன்று நாட்டுத் துப்பாக்கிகளைக் கைப்பற்றியதாக போலீசிடம் சொன்னான். ஆனால் சண்டிகர் பிராந்திய போலீசின் விசாரணையின் போது அது பொய் என்று தெரியவே, கடத்தல், சட்டவிரோதமாக பணய கைதியைப் பிடிப்பது, மோசடியான ஆயுதப் பறிமுதல் ஆகிய குற்றங்கள் தல்பீர் மீது சுமத்தப்பட்டன. ஊக்கத் தொகை தவிர கிரிமினல் குற்றங்களால் ஏராளமான சொத்துக்களைச் சேர்த்திருந்த தல்பீர் சிங் பாட்டியாலா, சண்டிகர், மேகாளி ஆகிய இடங்களில் இருந்தசொத்துக்களை விற்றுவிட்டு நாட்டைவிட்டே ஓடுவதற்குத் திட்டமிட்டிருந்தான்.

இந்தச் சமயத்தில்தான் தல்பீர் சிங்கின் நடத்தைகளை விசாரிக்கும்படி —உளவுத்துறை எஸ்.பி பல்தேவ் சிங் பிராருக்கு ரிபைரோ உத்திரவு போட்டார். சில நாட்களுக்குப் பிறகு அவனை நிராயுதபாணியாக்கி, தற்காலிக வேலை நீக்கம் செய்யும்படி. எஸ்.எஸ்.பி சித்தால் தாசுக்கு உத்திரவு போட்டார். தல்பீர் சிங்கை விசாரித்து, நடவடிக்கை எடுப்



படிப்பகம்

www.padippakam.com

பதற்காக அழைத்து வந்த போது தான் அந்த இரு உயர் போலீசு அதிகாரிகளை அவன் சுட்டுக் கொன்றான். தல்பீர் சிங் விவாகரத்தை அமுக்கி விடுவதற்காக அவனையே போலீசார் சுட்டுக் கொன்றனர்.

இரகசிய—அதிரடிக்கொலைப் படையின் ஒரு கிரிமினல் தல்பீர் சிங்கின் கதைதான் முடிந்திருக்கிறது. அந்தப்படை இன்னமும் கலைக்கப்படவில்லை. அதிலுள்ள 10, 15 பேர் மேலாவது பல கிரிமினல் குற்றச்சாட்டுகள் உள்ளன. இன்னமும் அவர்கள் அதே அதிகாரங்களுடன் உலாவுகின்றனர்.

### பாசிஸ்டுகளுக்கு பழக்கமான ஆயுதம் கொலைப்படை

அமிர்தசரசு எஸ்எஸ்பி ஆலம் முன்வைத்து செயல்படுத்தியது தான் இந்த இரகசிய—அதிரடிக் கொலைப்படை என்று கூறித் தட்டிக் கழிக்க முயலுகிறது ராஜீவ்—ரே— ரிபைரோ கும்பல். இந்திரா சாவுக்குப்பிறகு சீக்கியர்களுக்கு எதிராக நடந்த கொலை வெறியாட்ட அனுபவத்திலிருந்து கிரிமினல் குற்றவாளிகளும், போலீசு கிரிமினல்களும் இதற்கு தகுதியானவர்கள் என்று கற்றுக் கொண்டது பாசிச ராஜீவ் கும்பல். குறிப்பாக ஜூலையில் நடந்த இடைத் தேர்தல்களின் போது சிறையிலிருந்த தொழில்முறை கிரிமினல்களை விடுதலை செய்து பயன்படுத்திக் கொண்டது. அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்ட அவர்களைப் பயன்படுத்துகிறது.

அதே போல ரிபைரோ பம்பாய் நகர போலீசு கமிஷனராக இருந்த போதும், குஜராத் டிஜிபி ஆக இருந்த போதும் கடத்தல்—மஃபியா கும்பலையும் மத வெறிக் குண்டர்களையும் ஒடுக்கிய திறமைசாலி ரிபைரோ என்று பத்திரிக்கைகள் பாராட்டுகின்றன. மஃபியா மற்றும் மதவெறிக் குண்டர்கள் மத்தியில் சில கிரிமினல் குற்றவாளிகளை ஊடுருவச் செய்து, அவர்களிடையேபோட்டியும், படுகொலைகளும் செய்து கொள்வதற்குத்தான் ரிபைரோ ஏற்பாடு செய்தார். இதனால் புதிய மஃபியா, மற்றும் மதவெறி குண்டர்கள் உருவானார்களே தவிர ஒழிந்துவிடவில்லை.

1970—71இல் சித்தார்ந்த சங்கர்ரே மேற்கு வங்க முதல்வராக இருந்தபோது நக்சல்பாரி இயக்கம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. பஞ்சாபில் இப்போது செய்வதைப் போல 'போலீசுடனான மோதல்' என்கிற பெயரில் பல நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் படு கொலை செய்யப்பட்டனர். இளைஞர்கள் மத்தியில் பயபீதியை ஏற்படுத்துவதற்காக பலரைப் பிடித்து கொலை செய்து நகர விதிகளில் இறைத்தனர். மார்க்சிய—லெனினியக் கட்சியின் மேற்கு வங்க செயலரும், அரசியல் தலைமைக் குழு உறுப்பினரும், அதன் அதிகார பூர்வ ஏடான ''விடுதலை''யின் ஆசிரியருமான சரோஜ் தத்தா மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு சாக்கடையில் வீசப்பட்டிருந்தார். இப்படி ஏராளமான கொலைகள். கல்கத்தா பவானிபூர் பகுதியில் மட்டும் ஒரே வாரத்தில் 800 பேர் கொல்லப்பட்டனர்.

கல்கத்தாவில் நக்சல்பாரிப் புரட்சியாளர்களை இப்படிக் கொலை செய்தவர்கள் யார் தெரியுமா? இந்திரா காங்கிரசு மற்றும் வலது கம்யூனிஸ்டு குண்டர்கள், இரகசிய உலக மஃபியா மற்றும் கிரிமினல்கள் ஆகியோரைக் கொண்டு இரகசிய—அதிரடிப் படையைக் கட்டிய ரே மற்றும் அவருடைய நம்பகமான டிஜிபி ரஞ்சித் குப்தா என்கிற கொலை வெறியன். இந்தக் கொலைப்படையின் தாக்குதலுக்கு சில ''இடது கம்யூனிஸ்டு கட்சி''யினரும் பலியாயினர். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தக் கொலைகளுக்குக் காரணமானவர்களை விசாரித்துத் தண்டிப்போம் என்றார் ஜோதி பாசு. ஆனால் அப்படிச் செய்யவில்லை. மாறாக போலீசுத் துறையிலுள்ள கொலைகாரர்களுக்கு பதவி உயர்வு கொடுத்தார். இப்படி இரகசிய—அதிரடி கொலைப்படையை நிறுவி அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு எதிரிகளைக் கொன்று அடக்குவதில் முன் அனுபவம் உள்ளவர்தான் சித்தார்த்த சங்கர் ரே — இப்போதைய பஞ்சாப் கவர்னர்.

ஆக ராஜீவ்— ரே-ரிபைரோ கும்பல் தமது முன் அனுபவங்களைக் கொண்டுதான் பஞ்சாபில் ஒரு இரகசிய— அதிரடிக் கொலைப்படையைக் கட்டியுள்ளது. பஞ்சாப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குப் பதில் இரகசியமான படுகொலைகளால் தீர்வு காண பாசிச ராஜீவ் கும்பல் முடிவு செய்துள்ளதையே இது காட்டுகிறது. ''நீல நட்சத்திரம்'', ''காட்டு ரோஜா'' நடவடிக்கைகளின் விளைவாக பாசிச இந்திரா கும்பலின் தலைவியே பலியானார். ராஜீவ் கும்பல் இப்போது கட்டவிழ்த்து விட்டுள்ள கொலைப்படை அதையே குறி வைக்கத் தயங்காது! ●

● ஆர். கே.

## மானமிகு திராவிட வாரிசுகளின் கல்வி வியாபாரம்

ஐயா, வணக்கம். எனது மகளின் கல்லூரி சேர்க்கையின் போது ஏற்பட்ட பிரச்சினைகள் பற்றிய புகாரை இதில் தங்களுக்கு அளிக்கிறேன்.

எனது மகளை (எல். தனசேகரி, எஸ்.எஸ்.எல்.சி மதிப்பெண் 410 | 500. பிற்பட்ட வகுப்பு) தொழில்நுட்ப பிரிவில் சேர்க்க பல கல்லூரிகளுக்குவிண்ணப்பித்திருந்தேன். தந்தை பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக்—வல்லம், தஞ்சாவூர்—கல்லூரியிலிருந்து தேர்வு ஆணை வந்தது. இருந்தும், இக்கல்லூரியில் சேர கட்டாய நன்கொடை அளித்தே யாக வேண்டும் என உள்ளூர் தி.க பிரமுகர்கள் கூறினார்கள். இது பற்றி தெரிந்துக் கொள்ள அக்கல்லூரியின் தாளாளர்-திரு.குப்புசாமி பொருளாளர் தி.க. தஞ்சை-அவர்களைச் சந்தித்தேன். அவர் 'தகுதி அடிப்படையில் உங்கள் பெண்ணுக்கு இடம் கிடைத்திருப்பதால், நானாக 'டொனேஷன்' எதுவும் கேட்க முடியாது. தாங்களாகவே ஒரு தொகையை அளித்து கல்லூரியில் சேர்ந்துக் கொள்ளுங்கள்' எனக் கூறினார்.

நான், இது பற்றி சரியான முறையான ஒரு பதிலை அளிக்க கூறினேன். பிறகு அவர் ''நன்கொடையாக ரூபாய் 3000ம் மற்றும் 'உண்மை', 'விடுதலை' ஏடுகளுக்கு மூன்றாண்டு சந்தாவும் செலுத்தி சேர்ந்து கொள்ளுங்கள். நீங்கள்தான் பொதுதுறையில் (என்.எல்.சி.) பணிபுரிகிறீர்களே!'' எனக் கண்டிப்புடன்கூறி விட்டார். மேலும், இக்கல்லூரியில் சேரும் மாணவிகள் அனைவரும் தி.க. வெளியிடுகளான 'உண்மை' 'விடுதலை' ஏடுகளுக்கு கல்விக் காலம் முழுவதற்குமான சந்தா செலுத்தியாக வேண்டும் என்பது விதிமுறையாம்!

இதனால், என் மகளை வேறொரு கல்லூரியில் சேர்த்து விட்டேன்.

பிற்படுத்தப்பட்டவர்களின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் தங்களது உடல், பொருள், ஆவி இன்னபிறவற்றையும் செலவிடுவதாக கூறும் திக. தலைமை உண்மையில் பிற்படுத்தப்பட்டவர்களின் உடல், பொருள், ஆவியை உறிஞ்சிக் கொண்டு தங்களையல்லவா முன்னேற்றிக் கொள்கிறது?!

—இரா. இலக்குமணன்,
நெய்வேலி.



படிப்பகம்

www.padippakam.com

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்:



# விவசாயிகளுக்கா? வர்த்தக சூதாடிகளுக்கா?

கல்லக்குறிச்சி வட்டம், சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் விளை பொருட்களுக்கு ஒவ்வொரு முறையும் ஒரு வாரம், 10 நாட்கள் கழித்து பணம் பட்டுவாடா செய்வதும் அதனால் அவர்கள் அவதியுறுவதும் கடந்த 2 மாதகாலமாக வாடிக்கையாகிப் போனது. விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளை திரட்டி இப்பிரச்சனையில் தலையிட்டனர். வியாபாரிகளின் கைப் பாவையாக இருந்த விற்பனைக் கூடத்தின் கண்காணிப்பாளரைச் சந்தித்து, ''சட்டப்படி அன்றாடம் பணம் பட்டுவாடா, செய்யப்படவில்லையென்றால் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்போம்'' என எச்சரித்தனர். விவசாயிகளின் கண் துடைப்புக்காக கண்காணிப்பாளரை மாற்றியது மேல்மட்ட நிர்வாகம். ஆனால் நிலைமை சீரடையவில்லை.

இதையடுத்து, விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் படும் பாட்டை பட்டி தொட்டிகள்—ஏறக்குறையசுற்றுப்புற 30கிராமங்கள் எல்லாம் விவிமு பிரச்சாரம் செய்தது. 2.9.88 அன்று விவசாயிகளைத் திரட்டி ஊர்வலம் ஒன்றை நடத்தவும் விவிமு திட்டமிட்டது.

வியாபாரிகள் கும்பல் எதிர் வேலையில் இறங்கியது. ஊர்வலத் தேதியில் வியாபாரிகள் நெல்லை மட்டும் ஏலம் எடுத்துக் கொண்டு 500 மூட்டை மணிலாவை 'அம்போ' என்று விட்டுவிட்டு சென்றுவிட்டனர். காரணம், கொஞ்சம் ஈரம் இருந்தாலும் மணிலாப் பயிறு அழுக ஆரம்பிக்கும்; மூட்டையோடு இருந்தால் ஒரே நாளில் பூஞ்சை பிடித்துதரமிழந்துவிடும். மேலும், அன்றைய மறு தினம் சனிக்கிழமையாதலால், விவசாயியால் மணிலாவை வேறு எங்கும் கொண்டு செல்லவும் முடியாது; அதற்கு அவனிடம் வசதியும் இருக்காது. வியர்பாரிகள் எதிர்பார்த்தபடியே, இடிவிழுந்த விவசாயிகள் தங்கள் கோபத்தை எல்லாம் விவிமு மீது திருப்பினர்.

விவிமு, பொறுமையாக விவசாயிகளிடம், வியாபாரிகளின் சதியை விளக்கியது. பிரச்சினைக்கு தீர்வுகாண, 'உடனடியாக, அருகில் இருக்கும் கல்லக்குறிச்சி விற்பனைக் கூடத்தில் அந்த வியாபாரிகள் கொள்முதல் செய்திருக்கும் தாணியங்களை வெளியே விடமால் தடுத்து, வியாபாரிகளை வழிக்குக்கொண்டு வருவோம்' என விவிமு ஆலோசனை கொடுத்தது. அப்போராட்டத்தை விவிமு தலைமை தாங்கி நடத்துவதாகவும் உறுதி கொடுத்தது.

இதற்கிடையில் சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய சேர்மன், தான் இந்த பிரச்சினையை முடிப்பதாகக் கூறினார். விவசாயிகளும் நம்பினர். விவிமு ஆலோசனையை அன்று ஒருநாள் தள்ளி வைப்பது என முடிவெடுக்கப் பட்டது.

***விவசாயிகளின்கோரிக்கைக்கிணங்க,விவிமுஊர்வலம்விற்பனை*** கமிட்டிக்கு கொண்டு வராமல் சங்கராபுரம் ஊர் எல்லைவரை எழுச்சியுடன் நடத்தி முடிக்கப்பட்டது. அன்று இரவு ஆகியும் வியாபாரிகள் வராமல் போகவே, உறுதி கொடுத்த சேர்மேனிடம் விவசாயிகளை திரட்டிக் கொண்டு விபரம் கேட்டது விவிமு. 'தன் பேச்சுக்கு வியாபாரிகள் கட்டுப்படவில்லை' என அவர் கையை விரித்தார். மோசம் போன விவசாயிகள் கொதித்தெழுந்தனர். இனிமேலும் தாமதிக்காது, விவிமு ஆலோசனையை அமுல்படுத்துவதென முடிவெடுத்தனர்.

உடனடியாக, சங்கராபுரம் விற்பனைக் கூடத்திலிருந்து நெல் மூட்டைகளை ஏற்றிச் சென்ற கடைசி இரண்டு லாரிகள் அன்று இரவே தடுத்து நிறுத்தப்பட்டது. விவசாயிகளுடன், விவிமு தோழர்களும் இரவு முழுக்க விழித்திருந்து தடுத்து நிறுத்திய லாரிகளை கண்காணித்தனர். அதிகாலையில் வந்து நெல் ஏற்றிய டிராக்டர் ஒன்றும் தடுத்து நிறுத்தப்பட்டது.

அன்று காலையே, மதியம் 12 மணிக்குள் மணிலா பயறு கொள்முதல் நடக்கவில்லையென்றால் விவிமு விவசாயிகளைத்திரண்டிக் கொண்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடும் என பிரச்சாரம் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் மத்தியில், விவிமு முடிவுக்கு ஏகோபித்த ஆதரவு கிட்டியது.

ஆளே இல்லாதிருந்த சங்கராபுரம் 'காவல்' நிலையம் 5 நிமிடத்தில்அல்லோலகல்லோலப்பட்டது. 'ஒயர்லெஸ்' மூலம் சுற்றியிருந்த போலீசு நிலையங்களுக்கு செய்தி பறந்தது. வெளியூர் சென்றிருந்த போலீசு அதிகாரிகள். ஒரு பெரும் போலீசு படையுடன் விற்பனைக் கூடத்தின் முன் வந்திறங்கினர். உள்ளூர் வியாபாரி ஒருவரின் துணையுடன் போலீசு அதிகாரிகளே கல்லக்குறிச்சி சென்று வியாபாரிகளைப் பேசி அழைத்து வந்தனர். அன்றைய தினமே, வியாபாரிகள் ஏலத்தை முடித்தனர். விலை குறைத்துப் போடுவார்களோ என்று பயந்த விவசாயிகள் விலைப்பட்டியலைப்பார்த்து திருப்தியடைந்தனர்.

அதன்பின் விவசாயிகளைக் கூட்டி நடந்த போராட்டத்தின் அனுபவங்களைத் தோழர்கள் விளக்கினர். ஒவ்வொரு ஊரிலும் விவிமு கிளையைத் துவக்குமாறும் அறைகூவல் விடுத்து விவிமு தோழர்கள் விடைபெற்றனர்.

விவசாயிகளுடனே இருநாட்கள் பட்டினியோடும், உறங்காமலும் உடனிருந்து உறுதியான நடவடிக்கையில் இறங்கி, பிரச்சினையைத் தீர்த்த விவிமுதான் விவசாயிகளின் உண்மையாக நம்பிக்கைக்குரிய அமைப்பு என்று பகுதி முழுவதும் விவசாயிகள் பிரச்சாரம் செய்கிறார்கள்.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி
கல்லை வட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசுக்கு வால்பிடிக்கும் 'இன'மானக் காவலர்கள்

சென்னை— தொழிற்பேட்டைப் பகுதியான அம்பத்தூரில், தொழிலாளர்கள் நிறைந்து வாழும் இப்பகுதியில் சாதி ரீதியாக தொழிலாளர்களை பிளக்க மூக்கை நுழைத்திருக்கிறது, வன்னியர் சாதிய சங்க தலைமை.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலிருந்தும் குறிப்பாக திருவள்ளூர்வரைஉள்ள பகுதிகளில் சுமார் 3000 வன்னிய இளைஞர்களைத் திரட்டி வந்து அம்பத்தூர் பேருந்து நிலையம் அருகே 24.8.88 அன்று 'மாபெரும்' கூட்டம் நடத்தப்பட்டது.

வன்னியர் சொந்தங்களைஉய்விக்க அவதாரம் எடுத்ததாக கூறும் அச்சாதிய சங்க தலைவர் ராமதாஸ், ஓட்டுக்கட்சி தலைவர்கள் பாணியில் வண்ண விளக்குகளால் அலங்கரிப்பட்ட தேரில் பவனி வந்தார். கூட்ட முகப்பில் 30 அடி உயரத்துக்கு ராமதாஸ் உருவம் கொண்ட 'கட்அவுட்' வண்ண விளக்குகளால்அலங்கரிக்கப்பட்டிருந்தது.சாதியசங்கவளர்ச்சிக்கென அப்பாவி வன்னிய சாதிய மக்கள் தங்கள் ரத்தத்தை விற்றுக் கொடுத்த நிதி 'தலைவ'ரின் புகழ் பரப்ப இப்படி குப்பையாக இரைக்கப்பட்டது.

இரவு 7.30 மணிக்கு துவங்கப்பட்ட ஊர்வலத்திற்கு வழக்கம் போல மாலை 5.30 மணிக்கே அப்பகுதி போக்குவரத்து தடை செய்யப்பட்டது. ஊர்வலம் ரயில்வே கேட்டைக் கடக்க வேண்டி அப்பகுதி ரயில் போக்குவரத்தும் 20 நிமிடம் தடை செய்யப்பட்டது.

100 அடி நீளத்திற்கு தொடர் வெடி பட்டாசுகள், 40க்கும் அதிகமான ராக்கெட் வெடிகள் காதை பிளக்க நள்ளிரவுக்கு பிறகு சுமார் 1.45 மணிக்கு ராமதாஸ் பேச்சை ஆரம்பித்தார்.


''கிராமங்களிலே அனைத்து ஓட்டுக் கட்சிகளின் கொடிகளையும் வெட்டி, ஓட்டுக் கட்சிகளை சார்ந்தவர்களையும் ஓட ஓட விரட்டியடித்துள்ளோம். இப்போது நகரங்களில் மேற்கண்ட வேலையைச் செய்ய வேண்டியிருப்பதால்பிரவேசித்துள்ளோம்'' என்றார். ''அப்படியும் நமக்கு இட ஒதுக்கீடு கொடுக்காமல் ஓட்டுக் கட்சிகள்தேர்தலில்வெற்றி பெற்றால் நீடிக்க மாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்'' என்று சபதம் செய்தார்.

''நாம் இப்போது இடஒதுக்கீட்டுக்கான அரசாணைக்குத்தான் போராடுகிறோம். கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும்அடுத்துநாம் போராட வேண்டியதுஅரசாட்சிக்கான போராட்டம். அதற்கு நிறைய திட்டங்கள் இருக்கிறது. அதைப் பற்றி விரிவான விபரங்களை பிறகு தெரிவிக்கிறேன்'' என்றார்.

கூட்டத்தில் பேசிய பெரும்பாலோர் குறிப்பாக 'தி.மு.க.வை ஒரு கைப் பார்த்தே தீருவோம்'' என்று முகம் சிவந்தனர். காங்கிரசுக் கட்சிப் பற்றியோ, அ.தி.முகவைப் பற்றியோ—குறிப்பாக காங்கிரசுக் கட்சி பற்றி வாயேதிறக்கவில்லை.

ஏற்கனவே, தமிழகத்தில் தேர்தலைத் தள்ளிப் போட்டதற்கு வன்னியர் சங்க போராட்டம்தான் காரணம் என மறைமுகமாக பிரச்சாரம் செய்து வன்னியர் சாதிய சங்கத்திற்கு ஒரு 'அந்தஸ்த்தை' வழங்கி ஊக்குவித்து வருகிறது காங்கிரசு தலைமை; இந்த 'கௌரவத்திற்கு' கைமாறாக வரும் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு கையாளாக வன்னியர் சங்க தலைமை காரியமாற்றும் என்பதைதான் இத்தகைய கூட்டங்கள் வெளிப்படையாக தெரிவிக்கின்றன.

—இரணியன்,
மக.இ.க—சென்னை



## போலிகளின் புதிய ஐக்கியம்

புரட்சிகர சக்திகளுடன் ஐக்கியப்பட அடிப்படையும் அருகதையுமில்லாமல் அம்பலப்பட்டுப் போன இந்திய மக்கள் முன்னணியினர் இப்போது போலிக் கம்யூனிஸ்டுகளுடன் பொருத்தமாக கூட்டணி கட்டிக் கொள்ள நாயாய் அலைகின்றனர்.

தன்னார்வக் குழுக்களால் ஜீரணிக்கப்பட்டுவிட்ட இந்திய மக்கள் முன்னணியின் தலைவர் நாகபூஷன் பட்நாயக்குக்கும், வலது கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் ஜெகன்னாத் சர்க்காருக்குமிடையே பீகாரில் இடதுசாரி சக்திகளின் ஐக்கியத்திற்கான பேச்சு வார்த்தை சமீபத்தில் நடந்தேறியுள்ளது.

பாராளுமன்ற சாக்கடையில் மூழ்கி புதுச் சுகம் கண்ட இமமுவுக்கு அதில் முத்தெடுக்கவும் ஆசை. 1984 சட்டமன்றத் தேர்தலில் 54 இடங்களில்போட்டியிட்ட இ ம மு வினர் அனைத்திலும் தோல்வியுற்றாலும், 12 இடங்களில் வெற்றிக்கு மிக அருகில் இருந்தனராம். இன்னும் கொஞ்சம் ஓட்டுக்கள் விழுந்தால் தேர்தல் வெற்றி நிச்சயமாகி 'மாண்புமிகு புரட்சிவாதி'யாகி விடலாம். எனவேதான் இப்போது வலதுகளுடன் பேச்சு வார்த்தையில் இறங்கியுள்ளனர்.

இரு மாதங்களுக்கு முன்பு பீகாரின் நோன்கி—நக்வான் கிராமங்களில் இமமு ஆதரவாளர்களான தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள் சாதி வெறிக்குண்டர்களால் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது இ ம மு வினர் வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராமாஷ்ரய பிரசாத்சிங் என்ற சாதி வெறிக் கொள்ளையன்மீதும் குற்றம் சாட்டினர். இப்போது வலதுகளுடன் உறவுக்குக் கை கொடுக்கக் கிளம்பியுள்ளதால், அந்த விவகாரத்தை அப்படியே அமுக்கி விட்டு மறப்போம்! மன்னிப்போம்! என்ற கொள்கையை இ.ம.மு.வினர் மேற்கொண்டுள்ளனர்.

இதோடு, இப்போது இமமுவினர் ரஷிய கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய தங்களது நிலைப்பாட்டைத் திருத்திக் கொண்டுள்ளதாகவும், இப்போது ரஷியகம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து கூடுதல் வழிகாட்டுதல்களை எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளனர்.

எப்படியோ! புரட்சி வேடம் போட்டுக் கொண்ட இ ம முவினர் வெகுசீக்கிரத்திலேயே சாயம் வெளுத்து பாராளுமன்ற சகதிக்குள் வீழ்ந்து, போலிக் கம்யூனிஸ்டுகளின் வரிசையில் பொருத்தமாகவே அணிவகுத்து நிற்கத் தொடங்கி விட்டனர். நல்ல முன்னேற்றம்தான்!



படிப்பகம்

www.padippakam.com



# கோயாபல்சின் மறு அவதாரமாக கேடயம்-மன ஓசை கும்பல்

கேடயம், ஆகஸ்ட் மாத இரு இதழ்களும் சேர்ந்து பாசிச எதிர்ப்பு இயக்க மாநாட்டு சிறப்பு வெளியீடாக வெளிவரும் என்று கேடயம்–மன ஓசை கும்பல் அறிவித்திருந்தது அந்த இதழ் வந்தது. ஒரு பக்கத்தில் மாநாட்டுப் புகைப்படங்கள் ஆறு; ஒரு பத்தியில் மாநாட்டுச் சிறப்பு மலர் விளம்பரம். இவை தவிர புதிய ஜனநாயகத்துக்கு எதிராக வழக்கமான பாணியில் பொய்கள், அவதூறுகள், விதண்டாவாதங்கள், குதர்க்கமான கேள்விகள், வெறும் மழுப்பல்கள் நிரம்பிய இரண்டு பக்கங்கள். இவைதான் மாநாட்டுச் சிறப்பு என்கிற அளவுக்கு ஓடுகாலிகள் பீதியடைந்து போயுள்ளது தெரிகிறது.

## பொய்களின் மொத்த உருவாக ஓடுகாலிகள்

புதிய ஜனநாயகத்துக்கு எதிராக கோயாபல்ஸ் பாணியில் பல புளுகுகளைத் திரும்பத் திரும்பப் பிரச்சாரம் செய்வதன் மூலம் தனது ஓடுகாலித்தனத்தை மூடி மறைத்து விடலாம் என்று கேடயம் மனஓசை கும்பல் கனவு காண்கிறது.

ஓடுகாலிகளும் அவர்களுடைய சகபாடிகளும் கூட்டு அரசியல் பித்தலாட்டத்தைத் தொடங்கி சந்தர்ப்பவாத ''அறைகூவலை'' விட்டது மே மாதம். அடுத்த மாதமே ''சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக... புரட்சியாளர்களின் ஐக்கியமும், கூட்டு நடவடிக்கையும்'' என்கிற 30 பக்கப் பிரசுரத்தை நமது தோழர்கள் வெளியிட்டு விட்டார்கள். பெரும்பான்மையான புரட்சிகரத் தோழர்களால் அது சரியானது என்று வரவேற்கப்பட்டது. அப்பிரசுரத்தில்உள்ள நமது நிலைப்பாடுகள் குறித்து எதுவும் கூறாத ஓடுகாலிகள் அவர்களுடைய அறைகூவலுக்கு எவ்வித பதிலும் கூறாமல் நாம் மவுனம் சாதித்து வந்ததாக முதல் புளுகுடன் தொடங்குகிறார்கள்.

நமது 30 பக்க பிரசுரத்தில், ''ஓடுகாலிகளின் அடிப்படை அரசியல்—சித்தாந்த நிலைப்பாடுகளும்'மார்க்சிய கம்யூனிஸ்டு'க் கட்சியின் நிலைப்பாடுகளும் சாராம்சத்தில் மட்டுமல்ல வரிக்குவரி, வார்த்தைக்கு வார்த்தை ஒன்றுதான் என்கிற நிருபணத்தை விரைவில் வெளியிடுவோம்'' என்று எழுதியிருந்தது. அதாவது ''சி. பி. எம்.'' கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகளை வைத்துக் கொண்டு இ. பொ. க. (மா—லெ) கட்சியின் பெயரால் ஓடுகாலிகள் மோசடி செய்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக அதை நிரூபிப்பதாகக் கூறியிருந்தது. அதையும் புதிய ஜனநாயகம் ஜூலை கட்டுரையில் வெளியிடுவதாக எங்கேயும் எழுதவில்லை. அப்படி இருக்கும்போது ஓடுகாலிகளான ''த. நா. அ. க.வின் அரசியல் நிலைப்பாடுகள் அனைத்துக்கும் வரிக்கு வரி பதிலளிக்கப் போவதாகக் கூறியிருந்தது'' என்று (கேடயம் ஆகஸ்டு) இரண்டாவது புளுகைத் தொடர்கிறார்கள் ஓடுகாலிகள்.

அதோடு ''புதிய ஜனநாயகத்தின் கட்டுரையில். த. நா. அ. க.வின் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றுக்கு சில வரிகளாவது பதில் கொடுத்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தவர்களும் ஏமாந்து போனார்கள்'' என்று மேலும் புளுகுகிறார்கள்.

ஓடுகாலிகள் தமது சந்தர்ப்பவாதக் 'கூட்டு' அரசியல் பித்தலாட்டங்களை மூடி மறைப்பதற்காக சில சம்பவங்களைப் பற்றி பொய்ச் செய்திகளைத் தருகிறார்கள். ''ஜனநாயக உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு'' என்பது வெறும் பெயர் பலகை அமைப்புகள், பத்திரிக்கைப் பிரபலங்களான அரசியல் பிழைப்புவாதிகள், ஏகாதிபத்திய உளவாளிகளான தன்னார்வக் குழுக்களைக்கொண்ட சந்தர்ப்பவாதமான கூட்டு நடவடிக்கை என்பதாலேயே இணைய மறுத்தோம். புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் ஒரு பகுதியினர் புரட்சிகர அணிகளைத் திசை திருப்பி ஓடுகாலிகள், ''புதிய இடதுகள்'' மற்றும் தன்னார்வக் குழுக்களின் பக்கம் இழுத்துச்செல்லும் முயற்சியின் ஒரு பகுதி என்பதை அறிந்ததும் அதன் தர்மபுரி புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள மறுத்தோம்.

திருச்சி சிறையில் இந்திய மக்கள் முன்னணியினரும் கேடயம்-மன ஓசை கும்பலைச் சேர்ந்த ஓரிருவரும் ஓரணியாகவும், நமது தோழர்களும் பு. ப. இ. மற்றும் மு. இ. அ.யினர் மற்றொரு அணியாகவும் இருந்தனர். அங்கே ''தேர்தல் பாதை திருடர் பாதை'' என்ற தலைப்பில் விவாதிக்க எமது அணி கோரியது. அதை எதிர்த்து புறக்கணிப்பதாகக் கூறி ஓடியது ஓடுகாலிகளின் அணி. பிறகு ''தேர்தல் பங்கேற்பா? புறக்கணிப்பா?'' என்ற தலைப்பில் விவாதிக்க சம்மதித்து பங்கேற்புக்காக ஓலிகாலிகளது அணியினரும் புறக்கணிப்புக்காக நமது அணியினரும் வாதிட்டனர். இதில் கூட்டுக் கமிட்டியில் பங்கேற்றுத் தனிமைப்பட்டது என்ன?

சென்னை ''முன்னோடி''யினர் நடத்திய சாரு மஜூம்தார் மற்றும் இபொக (மா-லெ) பற்றிய கருத்தரங்கம் கூட்டு நடவடிக்கை அல்ல. இபொக (மா-லெ)யின் பெயரால் அவர்கள் நடத்தும் பித்தலாட்டம் அம்பலமாகிவிடும் என்றஞ்சி . ''முன்னோடி''யினர் அழைத்தும் பங்கேற்க மறுத்து விட்டார்கள் ஓடுகாலிகள். நமதுதோழர்கள் பங்கேற்றார்கள். சாருமஜூம்தாரைப் புகழ்ந்து

இங்கே போராடும் தமிழச்சிகளை ரவுடிகளை ஏவி கற்பழிக்கச் செய்வேன் என்று மிரட்டி, ஏசி அடிக்க முயலுகிறார் ஒருவர். அதே நபர் அங்கே ஈழத் தமிழச்சிகளைக் கற்பழிப்பதற்கு எதிராக ஆரவாரம் செய்கிறார்.

ஆகா! இவரும் ஓர் ஈழ விடுதலை ஆதரவு சக்தி என்று தழுவிக் கொள்கிறார்கள் ஓடுகாலிகள்.
எல்லாம் வெறும் பிழைப்புவாதம், பித்தலாட்டம் என்று கருதவில்லை. இந்த இழி செயலுக்கு ஸ்டாலினையும் மாவோவையும் வேறு சான்று கூறுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

கொண்டே அவருடைய நிலைப் பாடுகளைக்குழிதோண்டிப் புதைக் கும் இந்திய மக்கள் முன்னனித் தலைமையைப் பற்றி பேசத் தொடங்கியதும் அவர்களும் தன் னார்வக்குழுவினர் சிலரும் ஆட் சேபம் தெரிவித்தனர். மற்றவர் களும், ஏற்பாடு செய்தவர்களும் நமது தோழர்கள் தொடர்ந்து பேசுவதை ஆதரிக்கவும் அனு மதிக்கவும் செய்தனர். எனவே தொடர்ந்து பேசிமுடித்தனர். அதன் முன்னும் பின்னும் மற்றவர் கள் தமது கருத்துக்களைப் பேசி னர். கருத்தரங்கில் கருத்துக் கணிப்பு எதுவும் நடக்கவில்லை. அப்படி இருக்கும்போது "பங் கேற்று குட்டுப்பட்டு வெளியேறிய தாக" புளுகுகிறார்கள் ஓடுகாலி கள்.

ஓடுகாலிகளின் சந்தர்ப்பவாத "கூட்டு" அரசியல் பித்தலாட்டங் களை அம்பலப்படுத்துவதுதான் ஜுலை 2 வது இதழ் புதிய ஜன நாயகத்தின் நோக்கமாகும். அதி லுள்ள நமது விமர்சனங்களில் காழ்ப்புணர்ச்சிதான் இருக்கிறது. அரசியல் எதுவும் இல்லை என்று புலம்புகிறார்கள் ஓடுகாலிகள். "புதிய இடதுகள்,', போலிக்கம் யூஸ்டுகள், டிராட்ஸ்கியவாதிகள், தன்னார்வக் குழுக்கள் ஆகிய ஓடுகாலிகளின் சகபாடிகளைப் போலவே, அரசியலுக்கு, கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட தோழமை, சமூக நேயம், தனி மனித—சமூக உறவு வேறு - அர சியல் உறவுவேறு என்கிற வாதங் களைத் தூக்கிக் கொண்டு வரு கிறார்கள். ஓடுகாலித்தனத்துக்கு எதிராக இயல்பான, நியாயமான வெறுப்புணர்ச்சி நமது விமர் சனங்களில் இருக்கவே செய்யும். அதை அரசியலுக்கு அப்பாற்பட்ட காழ்ப்புணர்ச்சி என்று சித்தரிக் கும் இவர்கள் அரசியல் ரீதியாக மட்டும் இருந்தால் அடாத பொறுப் புடன் பதில் சொல்பவர்களாக நடிக்கிறார்கள். இவர்களுடைய கோவை மாநாட்டில் விமர்சனப் பிரசுரங்களை விநியோகித்த முஇஅ தோழர்களை ஆபாசமாகத் திட்டி விரட்டினார்கள். இந்த ஈரோடு மாநாட்டில் ஓடுகாலி களின் பாசிச எதிர்ப்புக் கொள்கை திட்டம், முழக்கங்களுக்கு எதிராக சில கேள்விகள் எழுப்பி ஒரு சிறு பிரசுரம் விநியோகித்தவர்களுக்கு பொறுப்பான பதில் என்ன சொன் னார்கள்?

## அரசியல் கபட வேடதாரிகளாக கேடயம் மன ஓசை கும்பல்

"தநாஅக (மா-லெ) என்கிற பெயரில் இயங்கும் ஓடுகாலிகளை யும், நான்காவது அகிலத்தின் கிளைகளாக இயங்கும் டிராட்ஸ் கியவாதிகளையும், ஏகாதிபத்திய உளவு நிறுவனங்களான தன்னார் வக்குழுக்கள் ஊடுருவியுள்ள இந்திய மக்கள் முன்னணி போன்ற அமைப்புகளையும் அரசியல் குழுக் களாகக் கருதமுடியாது" என்றும் அவர்களுடன் புரட்சியாளர்களின் ஐக்கியத்துக்கோ கூட்டு நட வடிக்கைளுக்கோ இடமில்லை என்றும் அதற்கான காரணங் களையும் நமது 30 பக்க பிரசுரம் தெளிவாக வரையறுத்து நிரூபித் திருக்கிறது. முக்கியமாக இவர்கள் "தமது சொந்த அடிப்படை அர சியல்—சித்தாந்த நிலைப்பாடு களுக்கேகூட விசுவாசமானவர் கள் அல்லர். கோட்பாடுகளே இல்லாத சந்தர்ப்பவாதிகள். பாட் டாளி வர்க்கப் புரட்சியைச் சீர் குலைப்பதற்காகவே அரசியல்— சித்தாந்த வேடம் போட்டுக் கொண்ட சதிகாரர்கள் என்பதை நிரூபித்துள்ளது. கையுங்களவு மாகப் பிடிபட்ட திருடனைபோல முழிக்கும் ஓடுகாலிகள் அதுபற்றி எதுவும் கூறாமல் ஓடுகிறார்கள்.

ஓடுகாலிகளும், டிராட்ஸ்கிய வாதிகளும், தன்னார்வக் குழுக் களும் அவ்வப்போது "ஏதாவது" ஒரு அரசியல் சித்தாந்த நிலைப் பாடுகளை முன் வைத்துத் தங்களையும் அரசியல் இயக்க மாகக் காட்டிக் கொள்கிறார்கள். புரட்சிகர அணிகளைக் குழப்பு வதற்கு "அது" அவசியமாயிருக் கிறது. அதே சமயம் மார்க்சிய— லெனினியப் புரட்சியாளர்கள் அவர்களுடைய நிலைப்பாடுகள் மீது மட்டுமே எப்பொழுதும் விவாதித்துக் கொண்டிருக்க வேண்டும். அதோடு அவர்களது நடத்தைகள், அருகதைகள் சந்தர்ப்பவாதக் "கூட்டுகள்', பற்றிக் கேள்வி கேட்கக் கூடாது என்று விரும்புகிறார்கள்.

"தேசிய ஒருமைப்பாடு, தேசியப் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு" என்று முழங்கும் பாசிச ராஜீவ் கும்பல் இவற்றைப் பற்றி மட்டுமே பேசு, தன்னுடைய லஞ்ச ஊழல் அடக்குமுறை, உல்லாச ஊதாரித்தனம் பற்றி மட்டுமே பேசுகிறாயே என்று வாதிடுவதைப்போல ஓடுகாலிகள் தமது கொள்கை, திட்டம், முழக் கங்கள்மீது மட்டுமே கருத்துக் கேட்கின்றனர். போஃபார்ஸ் நிறுவனத்திடமிருந்து நன்னடத் தைச் சான்றிதழ் வாங்கி ராஜீவும், அமிதாபும், இந்துஜாவும் விசிறி விசிறிக் காட்டுவதுபோல, தமது சகபாடிகளின் பாராட்டுதல்களை எழுதி மாய்ந்து போகிறார்கள் ஓடு காலிகள். அவர்களது சந்தர்ப்ப வாத "கூட்டு" அரசியலை அம்பலப்படுத்தினால் அவை வெறும் அவதூறுகள் என்று கூறி மழுப்புகின்றனர்.

பாசிச எதிர்ப்புக் கொள்கை, திட்டம், முழக்கங்கள் குறித்து புதிய ஜனநாயகமும் அதன் தோழமை அமைப்புகளும் தொடர்ந்து தெளிவான கருத்துக் களை முன் வைத்து வந்திருக்கின் றன. ஆனால் ஓடுகாலிகளும் அவர்களுடைய சகபாடிகளும் பாசிச சுயேச்சதிகார எதிர்ப்பு மற்றும் ஜனநாயக உரிமைப் பாதுகாப்பு என்கிற பெயரில் நடத்தும் "கூட்டு" அரசியல் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்து வதுதான் ஜுலை 2வது இதழ் புதிய ஜனநாயகம் கட்டுரையின் நோக்கம். அவர்களுடைய சொல்லும் செயலும் வேறு வேறானவைஎன்பதை நிரூபிப்பது அதன் நோக்கம்.

அதற்கான ஆதாரங்களைத் தேடி வேறு எங்கும் போக வேண்டியதில்லை. கேடயமே போதும். அதாவது ஓடுகாலிகள், துரோகிகள், எதிர்ப் புரட்சியாளர் கள், சமூக விரோதிகள், மக்கள் விரோதிகள், ஏகாதிபத்திய உள வாளிகள், சமூக ஏகாதிபத்திய எடுபிடிகள் என்று கேடயம்—மன ஓசை கும்பலே கணிக்கும் அமைப்புகள்— நபர்களைக் கொண்டு பாசிச எதிர்ப்பு இயக்க மாநாட்டு கூட்டு நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இவர்களின் பாசிச எதிர்ப்பு சந்தர்ப்பவாத "கூட்டு" அரசியலை அடிப் படையாகக் கொண்டது என்று இவர்களுடைய ஆதாரங்களைக் கொண்டு அம்பலப்படுத்தினோம். குட்டு வெளிப்பட்டுப்போன ஆத்திரத்தில் முன்னுக்குப் பின் முரணாகவும் பொய்களையும் எழுதுகிறார்கள் ஓடுகாலிகள்.

**நமது விமர்சனங்களில் காழ்ப்புணர்ச்சிதான் இருக்கிறது. அரசியல் எதுவும் இல்லை என்று புலம்புகிறார்கள் ஓடுகாலிகள். "புதிய இடதுகள்,', போலிக்கம்யூஸ்டுகள், டிராட்ஸ்கியவாதிகள், தன்னார்வக் குழுக்கள் ஆகிய ஓடுகாலிகளின் சகபாடிகளைப் போலவே, அரசியலுக்கு, கருத்துவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட தோழமை, சமூக நேயம், தனிமனித—சமூக உறவு வேறு அரசியல் உறவுவேறு என்கிற வாதங்களைத் தூக்கிக் கொண்டு வருகிறார்கள். ஓடுகாலித்தனத்துக்கு எதிராக இயல்பான, நியாயமானவெறுப்புணர்ச்சி நமது விமர்சனங்களில் இருக்கவே செய்யும்.**



படிப்பகம்

www.padippakam.com

**“தநாஅக (மா-லெ) என்கிற பெயரில் இயங்கும் ஓடுகாலிகளையும், நான்காவது அகிலத்தின் கிளைகளாக இயங்கும் டிராட்ஸ்கியவாதிகளையும், ஏகாதிபத்திய உளவு நிறுவனங்களான தன்னார்வக்குழுக்கள் ஊடுருவியுள்ள இந்திய மக்கள் முன்னணி போன்ற அமைப்புகளையும் அரசியல் குழுக்களாகக் கருதமுடியாது” என்றும் அவர்களுடன் புரட்சியாளர்களின் ஐக்கியத்துக்கோ கூட்டு நடவடிக்கைகளுக்கோ இடமில்லை என்றும் அதற்கான காரணங்களையும் நமது பிரசுரம் தெளிவாக வரையறுத்து நிரூபித்திருக்கிறது.**

“கேடயம் இதழ்களில்இருந்து ஏராளமான மேற்கோள்களைக் கேடாகப் பயன்படுத்தி”யிருப்பதாக ஓலமிடுகிறார்கள், ஓடுகாலிகள். ஏராளமான மேற்கோள்கள் இல்லை. நான்குதான். ஓடுகாலிகளின் கூட்டாளிகளான இந்திய மக்கள் முன்னணியின் அரசியல் தலைமை, தன்னார்வக் குழுக்கள் மற்றும் அவற்றுடன் கிருஷ்ணய்யருக்குள்ள தொடர்பு ஆகியவை பற்றி ஓடுகாலிகள் “கேடய”த்தில் கொடுத்துள்ள கணிப்புகளையே மேற்கோள் காட்டினோம். மேற்கோளை எப்படிக் கேடாக பயன்படுத்தினோம் என்று ஓடுகாலிகள் எழுதவில்லை. ஆனால் அப்படி நம்மீது குற்றஞ்சாட்டிய அடுத்த பத்தியிலேயே அவை தமது மதிப்பீடுகள் தாம் என்று ஒப்புக் கொள்கிறார்கள்.

அதே சமயம் அந்த மதிப்பீடுகளுக்கு மாறாக அந்த அமைப்புகள்—நபர்களுடன் கூட்டு வைத்துக் கொள்வதற்கு ஒரு காரணத்தையும், இரண்டுஉதாரணங்களையும் கூறுகிறார்கள், ஓடுகாலிகள். இட்லரின் பாசிசத்துக்கு எதிராக அமெரிக்கா—பிரிட்டனுடன் ஸ்டாலின் கூட்டுச் சேர்ந்ததையும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கோமிங்டாங் பிற்போக்கு கும்பலுடன் மாவோ கூட்டுச் சேர்ந்ததையும், உதாரணங்களாகச் சொல்லுகிறார்கள் ஓடுகாலிகள். இதுவரை ஓடுகாலிகள் உட்பட எல்லா போலிக்கம்யூனிஸ்டுகளும் தமது கடைந்தெடுத்த சந்தர்ப்பவாத கூட்டுகள் அனைத்துக்கும் கொடுக்கும் உதாரணங்கள்தாம் இவை. இப்போது திமுக எம்எல்ஏ ரகுமான்கான்கூட தனது கட்சி “தேசிய முன்னணியில்” பங்கேற்பதற்கு இதே உதாரணத்தை இப்போது கூறியுள்ளார்.

எதிரிகளுக்குள்ளே உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, பிரதான எதிரிக்கு எதிராக இரண்டாம்பட்ச எதிரியுடன் கூட்டுச் சேருவதை நாம் ஒருபோதும் மறுக்கவில்லை. ஆனால் இட்லருக்கு எதிராக அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும், ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கோமிங்டானுக்கும் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டுச் சேரவேண்டிய பொதுவான அரசியல் இராணுவ அவசியம் இருந்தது. ஆனால் கேடயம்—மனஓசை கும்பல் கூட்டுச் சேர்ந்துள்ளவர்கள் பொதுவான அரசியல் அவசியம் கருதி வருபவர்கள் அல்லர். பொதுவான அரசியலையே, ஏன் அரசியலையே வேறு நோக்கங்களுக்காகத் தெரிவு செய்து கொண்டவர்கள். அதாவது இந்த ஓடுகாலிகள், டிராட்ஸ்கியவாதிகள், ஏகாதிபத்திய உளவாளிகளைக் கொண்ட தன்னார்வக் குழுக்கள் புரட்சியை சீர்குலைப்பதற்காக ஏதாவது வசதியானதொரு அரசியலைத் தெரிவு செய்து கொண்டிருப்பதைப் போல பிழைப்புவாதத்துக்காக பொதுவான அரசியலைத் தேடித் தெரிவு செய்து கொண்டவர்கள். சிவாஜி, ஜானகி, வீரப்பன், ஜெயலலிதா, நெடுஞ்செழியன், போன்றவர்களுக்கு இன உணர்வும், ஈழ ஆதரவும், அரசு ஊழியர் மீது அக்கறையும் வந்ததைப் போல ஓட்டுப் பொறுக்கிகளுக்கும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கும் அரசியல் என்பது வசதிக்கான—பிழைப்புக்கான கருவியே ஆகும்.

ஆனால் ஓடுகாலிகளின் “கூட்டு” ஏதோ கொள்கை அடிப்படையிலானது என்பதாகப் பீற்றிக் கொள்கிறார்கள். இந்தப் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தும் இன்னும் ஒரு உதாரணம் ஓடுகாலிகளின் மாநாட்டுக்குவந்த மற்றொரு கூட்டாளி மதுரை யாதவர் கல்லூரி முதல்வர் தமிழ்க்குடிமகன். அவரது கல்லூரி மாணவிகள் போராடியபோது, “பொறுக்கி நாயே, ரவுடிவுமன், சில்லி பெக்கர்ஸ்போராட்டமாடி நடத்துறீங்க, நாளைக்கு காலேஜுக்கு வந்தீங்கன்னா ரவுடிகளை வுட்டு மானபங்கப்படுத்தச் சொல்வேன்” என்று திட்டியதுடன் அடிக்கவும் முயன்றுள்ளார்.”

“வெளியே பட்டிமன்றம் என்ன, கவியரங்கம் என்ன, அப்படியே ஜனநாயகத்தையும் பெண்ணுரிமையை பற்றி பம்மாத்து செய்து திரியும் இவரின் முகத்தை இப்போது யாதவர் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் கிழித்துக் காட்டியுள்ளனர்” (1987 கேடயம் ஏப்ரல் 16-30) என்று எழுதினார்கள் ஓடுகாலிகள். ஆனால் அதே தமிழ்க்குடிமகனின் கிழிந்து போன முகத்துக்கு முக்காடு போட்டு அவர் பம்மாத்து செய்வதற்கு இப்போது மாநாடு போட்டுக் கொடுக்கிறார்கள் ஓடுகாலிகள்.

இங்கே போராடும் தமிழச்சிகளை ரவுடிகளை ஏவி கற்பழிக்கச் செய்வேன் என்று மிரட்டி, ஏசி அடிக்க முயலுகிறார் ஒருவர். அதே நபர் அங்கே ஈழத் தமிழச்சிகளைக் கற்பழிப்பதற்கு எதிராக ஆரவாரம் செய்கிறார். ஆகா! இவரும் ஓர் ஈழ விடுதலை ஆதரவு சக்தி என்று தழுவிக் கொள்கிறார்கள் ஓடுகாலிகள். எல்லாம் வெறும் பிழைப்புவாதம், பித்தலாட்டம் என்று கருதவில்லை. இந்த இழி செயலுக்கு ஸ்டாலினையும் மாவோவையும் வேறு சான்று கூறுகிறார்கள்.

“மாநாடு முன் வைத்த ஐந்து முழக்கங்களில் ஒற்றுமை கொண்டவர்கள் என்பதால் மாநாட்டில் ஒன்று கூடினார்கள்” என்று பீற்றிக் கொள்கிறார்கள் ஓடுகாலிகள். “அனைத்துக் கறுப்புச் சட்டங்களையும் ரத்து செய்!” என்பது ஓடுகாடுகாலிகளின் மாநாட்டு முழக்கங்களில் ஒன்று. அதிலேயும் ஒற்றுமை கொண்டு (!) பேசிவிட்டுப் போன கிருஷ்ணய்யர் ஒரு மாதத்துக்குள்ளாகவே “தபால் தணிக்கை—முடக்கச் சட்டத்துக்கு ஒப்பமளிக்காமல் ஜெயில்சிங் நிறுத்தியது தவறு. நாடாளுமன்றத்தில் நிறைவேறிய பிறகு அப்படிச் செய்ய அரசுத் தலைவருக்கு உரிமை இல்லை”என்கிறார்.

இதுதான் ஓடுகாலிகள் மாநாட்டில் பிரதானப்படுத்தியவரின் யோக்கியதை!

“மாநாட்டை நடத்தியவர்களுக்கும் சரி, கலந்துகொண்டவர்களுக்கும் சரி தாம் எங்கே ஒன்றுபடுகிறோம் எங்கே வேறுபடுகிறோம் என்பதில் சரியான தெளிவுண்டு.” ஆகவே அவர்களுக்குப் பிரமைகள் எதுவும் கிடையாது என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். உண்மைதான். ஓடுகாலிகள், துரோகிகள், எதிர்ப்புரட்சியாளர்கள், சமூக விரோதிகள், ஏகாதிபத்திய உளவாளிகள், சமூக ஏகாதிபத்திய எடுபிடிகள் என்று கேடயம்—மனஓசை கும்பலே கணிக்கும் அமைப்புகள்—நபர்கள் கூடி “கூட்டு” அரசியல் பித்தலாட்டம் செய்யும்போது அவர்களுக்குள்ளே சரியான தெளிவோடுதான் இருப்பார்கள். புரட்சிகர அணிகள்தான் அதைப் புரிந்து கொண்டு முறியடிக்க வேண்டும். ●

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



சர்க்கஸ் கரடி மட்டும் தான் சைக்கிள் ஓட்டுமா என்ன? இதோ காங்கிரசுக் கட்சி கருப்பைய்யா மூப்பனார்கூட சைக்கிள் ஓட்டு கிறார் பாருங்கள். வானொலி, வானொளி, காங்கிரசு எடுபிடி பத்திரிக்கைகள் இப்படித்தான் கருப்பைய்யா மூப்பனாரை அதிசய மிருகமாக்கி வேடிக்கைக் காட்டி மக்களிடம் அனுதாபத்தை கிளறிவிட முயற்சித்தன.

பாகிஸ்தான் அதிபர் ஜியா—வுல்-ஹக்கின் திடீர் மரணத்தினால், தான் சோகக் கடலில் மூழ்கிவிட்டதால், தன்னுடைய 45வது பிறந்த நாளை யாரும் கொண்டாட வேண்டாமென ராஜீவ் கேட்டுக் கொள்வதாக பறையடித்தன அரசின் பிரச்சார சாதனங்கள். மறுபுறம், கருப்பைய்யா மூப்பனார் போன்ற ராஜீவின் வளர்ப்புப் பிராணிகள் எப்படி எஜமானனின் பிறந்த நாளைக் கொண்டாடின என்பதையும் விலாவரியாகக் காட்டி பெருமையடித்துக் கொண்டன. வருங்காலத்தில், காங்கிரசு தலைவர் நடைவண்டி ஓட்டியதை உலக அதிசயமாகக் காட்டினாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

இதோ, தன்னுடைய ஒரு சாண் வயிற்றுக்காக உடம்பை வில்லாய் வளைத்து, முதுகு ஒடிய பெரும்பாரத்தை இழுத்துச் செல்லும் உழைப்பாளியை பாருங்கள். ஒரு நாள், இரண்டு நாள் அல்ல வாழ்க்கை முழுவதும் பாரம் இழுத்தே சாகும் தொழிலாளர்கள் இவர்கள்.

மூச்சு முட்டி ரத்தம்கக்கினால் கூட விடாமல் பாரம் இழுத்து வயிற்றைக்கழுவும் தினக்கூலிகள். கை ரிக்ஷாவில், மூன்று சக்கர வண்டியில், வெறுந் தலையில், காய்கறி, பாத்திரம், விறகு விற்பவர்களாக, ஓட்டை ஒடிசல் வாங்குபவர்களாக, கால் வயிற்றோடு நாள் முழுக்கசுட்டெரிக்கும் வெய்யிலிலும், கொட்டும் மழையிலும் சிறுகச் சிறுக கருகியும், கரைந்தும் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் உழைப்பாளிகள் இவர்கள்.



கால் அளவு நீரிலும் கையளவு சேறிலும் சில அடிகள் நடப்பதையும், வெய்யிலில்சில மீட்டர் தூரம் நடப்பதையும், சைக்கிள் ஓட்டுவதையும்,உலகமகாஅதிசயமாக மக்களிடம்ஏமாற்றி நாட்டையேசுரூட்டிக்கொள்ளும்மக்களின்'தலைவர்'கள் ஒருபுறம் ஓடாகிப் போகும் வரை உழைத்தும்குந்த ஒரு குடிசை இல்லாமல், கட்ட ஒருகந்தை இல்லாமல், வயிற்றுக்கு ஒரு பிடி உணவு இல்லாமல் மடிந்துபோகும் இந்நாட்டின் மைந்தர்கள் மறுபுறம்.

இன்னும் எத்தனை நாள்தான் இந்நிலை நீடிக்க அனுமதிப்பது?

படிப்பகம்